
திருவள்ளுவராண்டு 2054

02.08.2023

# உலகத்தமிழ்

இதழ் - கசுக (191)




"யாண்டு பலவாக" என்று தொடங்கும் பிசிராந்தையரின்
புறநானூற்றுப் பாடல் எண் நூற்றுத் தொண்ணூற்று ஒன்று
தோண்டிப் பல உண்மைகளைக் கட்டுரையாய்த் தொடுத்துத் தரும்
உலகத் தமிழிதழ் எண் நூற்றுத் தொண்ணூற்று ஒன்று

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 4 | கொள்கை விளக்கக் குறிப்பு |
| 5 | நூலேணி |
| 6 | தமிழெழுச்சி |
| 7 | யமுனையின் சீற்றம்! |
| 8 | அவ்வப்போது |
| 9 | தேன்துளி |
| 10 | சேரமன்னர் வரலாறு |
| 11 | ஆங்கிலம் அரும்பிய அரசும்—வாழ்வும்! |
| 12 | தனித்தமிழ் மாட்சி |
| 13 | பொன்வண்டு |
| 14 | நற்றிணை—ஆங்கிலம் |
| 15 | திறமையான வங்கி நிர்வாகி வள்ளியப்பா! |
| 16 | பதிகங்களைப் படியுங்கள்! |

# உள்ளடக்கம்


17 திரைப்படப் பாடல்கள்!

18 வள்ளுவம்!

19 தமிழன்னை நான்மணிமாலை

20 உலகு தழுவிய பொதுநோக்கு நூல் – திருக்குறள் !

21 சின்னஞ்சிறார்களைக் காப்போம்!

22 Bharathan In Kamba Ramayanam

23 பூ மழை

26 எல்லாம் தமிழ்!

27 புகழ் வணக்கம்!

30 ஆட்சிமொழிச் சட்ட வாரம் நிகழ்வுகள்!

## இயல்–1

## தமிழ் வளர்ச்சித் துறை

### 1.2.3. தமிழ்க் கவிஞர் நாள் விழா

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளைத் தமிழ்க் கவிஞர் நாளாகத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ஏப்ரல் 29–ஆம் நாளில் கொண்டாடி வருகிறது கடந்த 29.04.2022–இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற தமிழ்க் கவிஞர் நாள் விழாவில் பாவேந்தரைப் போற்றும் வண்ணம் கருத்தரங்கு நடத்தப்பெற்றது.

மேலும், அரசு கவின் கலைக்கல்லூரி மாணவர்களைக் கொண்டு சங்க இலக்கிய நூல்களிலுள்ள வாழ்வியல் தத்துவங்கள், கருத்துக்கள் அடங்கிய ஓவியங்கள் வரையப்பட்டு வண்ணமயமான நூலாகத் தயாரித்து வெளியிடப்பெற்றது.

### 1.2.4. தமிழ்நாடு நாள் விழா (ஜூலைத் திங்கள்–18)

மெட்ராஸ் மாகாணம் என்று இருந்த நிருவாக நிலப்பரப்பு, அறிஞர் அண்ணா அவர்களால் 1967– ஆம் ஆண்டு ஜீலை 18–ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றித் "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டப்பட்ட நாளைத் தான் "தமிழ்நாடு நாள்* என்று கொண்டாடப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.10.2021 அன்று தாய்த் தமிழ்நாட்டிற்குத் "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜீலை 18– ஆம் நாளே "தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்படும் என அறிவித்தார்கள். அதன்படி, 18.07.2022–இல் தமிழ்நாடு அரசால் சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு நாள் விழா கொண்டாடப்பட்டது. அதில் தமிழ்நாடு நாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மேலும், மாவட்ட/மாநில அளவில் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்குப் பரிசுகள் கீழ்க்காணுமாறு வழங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்பட்ட பரிசுத் தொகை | முதற் பரிசு | 10,000 |
| | இரண்டாம் பரிசு | 7,000 |
| | மூன்றாம் பரிசு | 5,000 |
| மாநில அளவில் பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்பட்ட பரிசுத் தொகை | முதற் பரிசு | 50,000 |
| | இரண்டாம் பரிசு | 30,000 |
| | மூன்றாம் பரிசு | 20,000 |

## Chapter 1

## Tamil Development Department

### 1.2.3. Tamil Poets' Day Celebration

The Tamil Nadu Government celebrates the birth anniversary of the revolutionary poet Pavendar Bharathidasan as Tamil Poet's Day on 29th April every year. A seminar was held in honour of Paavender at the Tamil Poets Day function at the International Institute of Tamil Studies on 29.04.2022.

Further, paintings with the theme of philosophy of life and ideology of Sangam literary works were prepared by the Government Fine Arts college students and the same was published as a vibrant book.

### 1.2.4 Tamil Nadu Day Celebration (18th July)

Hon'ble Chief Minister of Tamil Nadu announced on 31.10.2021 that the 18th July, will be celebrated as "Tamil Nadu Day" every year, in commemoration of the day (18.07.1967) when a resolution for renaming the Madras Province as Tamil Nadu was passed by Perarignar Anna. Accordingly, on 18.07.2022, Tamil Nadu Day was Government of Tamil celebrated by the Nadu at Kalaivanar Arangam, Chennai. A seminar on Tamilnadu day was conducted. Prizes were distributed to school/college students who won district/state level essay and elocution competitions follows: as

| | | |
|---|---|---|
| Prize amount awarded to School students for Essay and Speech Competitions at District level | First Prize | 10,000 |
| | Second Prize | 7,000 |
| | Third Prize | 5,000 |
| Prize amount awarded to School students for Essay and Speech Competitions at State level | First Prize | 50,000 |
| | Second Prize | 30,000 |
| | Third Prize | 20,000 |

வளரும் . . . .



# நூலேணி

27

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்




நூலின் பெயர் : தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள்

நூலாசிரியர் : புலவர் இரா. இளங்குமரன்

பதிப்பாண்டு : 1985

விலை : ரூபாய் 10 /-

பக்கங்கள் : 147

வெளியீட்டு எண்: 105




நூலின் பெயர் : டாக்டர் உ.வே.சா. காப்பியப் பதிப்புகள்

நூலாசிரியர் : முனைவர் இரா. காசிராசன்

பதிப்பாண்டு : 1985

விலை : ரூபாய் 10 /-

பக்கங்கள் : 178

வெளியீட்டு எண் : 106




நூலின் பெயர் : விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு

நூலாசிரியர் : டாக்டர் மு. தெய்வநாயகம்

பதிப்பாண்டு : 1985

விலை : ரூபாய் 20/-

பக்கங்கள் : 334

வெளியீட்டு எண் : 107




நூலின் பெயர் : செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள்

நூலாசிரியர் : டாக்டர் கரு. நாகராசன்

பதிப்பாண்டு : 1985

விலை : ரூபாய் 25/-

பக்கங்கள் : 336

வெளியீட்டு எண்: 108

சென்றனை என்கின்றாரச் செய்தி என்னே? ஊணின்றி

நின்றதென்னே? என்று நெரித்துவிட்டார் கேள்விகளை,

இன்னார்க் கிதுசொல்வ தென்று தெரியாமல்,

என்னாற் பலவுரைத்தல் இப்பொழுது கூடாதாம்.

நாளை வருவீரேல் நடந்ததெலாஞ் சொல்வேன் இவ் ...





நன்றாக உங்களுக்கு ராமன் அருளுண்டு

வானம் வரைக்கும் வளரும் உடலுண்டே

ஏனிங்கு நின்றீர் எடுத்துவரு வீர்மலையை

என்றஇச் சத்தம் இவர்செவியில் வீழ்ந்தவுடன்

குன்று பெயர்வது கொஞ்சமும்பொய் யல்லவென்று

# யமுனையின் சீற்றம்!

பெய்து கொட்டிய மழை பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம் பேரழிவைத் தருவதை தலைநகர் சந்தித்து வருகிறது. ஜூலைத் திங்களில் தொடங்கும் மழைக்காலம், வேகவைக்கும் வெயிலிலிருந்து நம்மைக் காக்க இயற்கை தரும் வரம் என்றாலும், சகிக்க இயலாத அல்லல் தரும் அழிவெனும் சாபமாக மாறி வருவதை இப்பொழுதெல்லாம் அடிக்கடி சந்திக்கும் அபாய காலத்தில் இப்புவியின் சுழற்சியும், பருவ நிலை மாற்றமும் பாடம் புகட்டி வருகிறது. அழகிய அமைதியான நதிதான் யமுனை நதி. அது சுமார் 10,000 ஹெக்டேர் நிலத்திற்குப் பரவி பாய்ந்து ஓடும் நதி. ஆறு பிரிந்து பல கிளைகளாகச் சுற்றி வளைத்து சுமார் 54 கிலோ மீட்டர்களுக்கு டெல்லியிலேயே வளம் சேர்க்கும் வள்ளல். அதனால் பலன் பெறும் வயல்வெளிகளும், விவசாயப் பகுதிகளும் அதன் நீர் வளர்த்தால் பல்லாயிரம் உயிர்களுக்கு உணவளிக்கிறது.



ஜூலை பதினோராம் நாள் தொடங்கிய யமுனை நதியின் நீரோட்ட அளவும் வேகமும் அன்று பெய்த மழையில், சில மணி நேரங்களிலேயே மக்கள் கால் மூட்டளவு நீரில் தான் பெருநகர் சாலையில் நடக்க வேண்டியதாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அடைமழையாக அழையாத விருந்தாளியாக இல்லங்களில் நுழைந்து சர்வ சாதாரணமாக அறைகளுக்குள் நுழைந்து ஓடத் தொடங்கியது. திடீரென்று சிறுவீடுகள் மூழ்கத் தொடங்கின. பாவம் எருமைகளும், ஆடு மாடுகளும் வெள்ளத்தில் மூழ்கி அடித்தும் செல்லப்பட்டன. “ஹாத்னிகன்” தடுப்பணை திறக்கப்பட்டதால்தான் இத்தகைய வெள்ள அதிகரிப்பு வந்தது என அங்கிருந்த மக்கள் கூறுகின்றனர். மெட்ரோ ரயில் நிலையப் பாலங்களில் புகலிடம் தேடி மக்கள் புகத் தொடங்கினர். புஷ்டா சாலையில் கூடாரங்கள் அமைத்து மக்கள் தங்கத் தொடங்கினர். வெள்ளத்தின் வேகம் வெகு விரைவில் சேதங்களையும், அழிவுகளையும் தொடங்க ஆரம்பித்தது. இத்தகைய தண்ணீருக்கிடையில் இம்மாத ஜூலைத்திங்கள் ஒன்பதாம் நாள் மிக அதிகமான மழை தொடர் 24 மணி நேரமும் 153 மில்லி மீட்டர் டெல்லியில் பெய்து யமுனை நதியின் அளவு உயரத் தொடங்கியது. ஜூலை 13 வரை இவ்வாறு யமுனையின் கொள்ளளவு கூடிக் கொண்டேச் சென்று கொஞ்சம் டெல்லியில் மழை குறைய ஆரம்பித்தது. ஆனால், இமாச்சலப் பிரதேச உயரமான பகுதிகளில் பெய்த மழையால், யமுனையின் கொள்ளளவு கூட டெல்லி தத்தளிக்கத் தொடங்கியது. டெல்லி அரசின் முன்னேற்பாடுகளையும் மீறி கட்டுக்கடங்காத அளவு அதிக பாதிப்பு ஏற்பட்டதால் அதன் விடாத முயற்சியையும் மீறி மக்களின் அல்லல் அதிகரித்திருந்தது. ஜூலை மாதங்களில் மழை ஏற்படும் வடமேற்குப் பகுதிகளில், எப்பொழுதும் எதிர்பார்ப்பதாக இருந்தாலும் இம்முறை மத்திய ஆசிய பருவநிலை மாற்றத்தினால் மற்றொரு வெப்பப்பகுதியின் எதிர் வினையாக மழை இம்முறை புயலாக மாறியது வித்தியாசமாக உள்ளது. மக்கள், தங்கள் வாழ்வாதாரமாக விளங்கிய யமுனையின் கரைப் பகுதி விவசாய நிலங்கள், சகதி கலங்கிய யமுனைக்குள், மூழ்கியதைக் கண்டு செய்வதறியாது கதற ஆரம்பித்தனர். அடுத்த நான்கு முதல் ஐந்து மாதங்களுக்கு அவர்களுக்கு இனி விவசாய அறுவடை அல்லது அன்றாட வாழ்விற்கான வருமானமும் இருக்கப் போவதில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

இம்முறை வந்த வெள்ளத்திற்குப் பின் யமுனை நதிக்கரை மக்கள் தங்களின் விவசாய வாழ்க்கையை மீண்டும் புதுப்பிப்பதைப் பற்றி மறு பரிசீலனை எடுக்கத் தொடங்குகிற அச்சமும் நிலவுகிறது. யமுனை நதி இம்முறை பெரிய பாடத்தைப் புகட்டி உள்ளது; தொடர்ந்து அடித்த விடாத மழையும், தடுப்பணையைத் தாண்டி திடீரென வேகமாய்ப் பாயந்து வந்த வெள்ளமும், இனி அடிக்கடி இவ்வாறு மழை வரலாம் என வானிலை ஆய்வு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மகேஷ் பாலவட் என்ற அறிஞர் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார். ‘இமாலயத்தின் மேற்குப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் நிலவியல் மாற்றம் மற்றும் வடமேற்கு சமவெளிப் பகுதிகளில் புயல் சுழற்சியுடன், உருளும் பனிக்காற்றும் சிந்து–கங்கை சமவெளியில் உருவாகும் பருவக்காற்றில் அதன் உட்பகுதியின் தாழ்வு நிலை என மூன்றும் இராஜஸ்தானின் வடமேற்கு திசையிலிருந்து வங்காள விரிகுடாக் கடற் பகுதி வரை காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக்கி, பருவந்தோறும் வெள்ள பாதிப்பு ஏற்படுத்துகிறது. இது புவி வெப்பக் கூடுதலினால் உருவான பருவநிலை மாற்றம் என்று தெரிவித்துள்ளார். நிலமும், கடலும் வெப்ப அதிகரிப்பினால் காற்றின் அதிக நீர் தாங்கும் சக்தி ஏற்படுவதன் பருவ நிலை மாற்றம் இப்பகுதிகளை நிலைகுலைய வைக்கிறது. விரைவில் தகுந்த நடவடிக்கை எடுத்து வெள்ள அபாயம் நீங்க வேண்டும் என எதிர்பார்ப்போம்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா ஆட்சிமொழிக் கருத்தரங்கம்



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், 12.07.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஆட்சிமொழிக் கருத்தரங்கினை தொடங்கி வைத்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழா கொண்டாடுவதையொட்டி தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 38 மாவட்டங்களிலும் 100 ஆட்சிமொழிக் கருத்தரங்கம் 6 திங்களில் நடத்தப்பெற திட்டமிடப்பெற்றுள்ளது.

இதன் தொடக்கமாக 12.07.2023 அன்று சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் முதல் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து விழாப் பேருரை ஆற்றினார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் மரு. இரா, செல்வராஜ், இ.ஆ.ப. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஔவை ந. அருள் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

இவ்விழாவில் முதலாவதாக: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்ட அறிவிப்பான பிறநாட்டு இலக்கியங்களைத் தமிழ்மொழியில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடும் திட்டத்தின்கீழ் கிரேக்கக் காப்பியங்களான ஓமரின் இலியட் மற்றும் 'ஒடிசி' ஆகிய நூல்களை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு மு.பெ. சாமிநாதன் அவர்கள் வெளியிட்டார். முதல்படியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் மரு. செல்வராஜ். இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார். நூலின் மொழிபெயர்ப்பாளர் திரு பொன் சின்னத்தம்பி முருகேசன் ஏற்புரை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 12.07.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு ஆட்சிமொழிக் கருத்தரங்கினை தொடங்கி வைத்து ஆற்றிய உரை

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களால் அவர் கண்ட கணவாக இன்றைக்கு லகத் தமிழாராய்ச்சி நிறுவனம் என்கின்ற வகையில் இங்கே சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு நம்முடைய முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களால் வழி நடத்தப்பட்டு அவர்கள் எல்லாம் இதை சிறப்புற கொண்டு செங்கவேண்டும். நம்முடைய தமிழ் மொழியை உயிர்பித்தாகவேண்டும் என்கின்ற வகையில் பாதுகாத்தாக வேண்டும் என்கின்ற அடிப்படையில் தொலைநோக்குப் பணிவையோடு இந்த அமைப்பை உருவாக்கி அதன்மூகமாக இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்று அதையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அந்த வகையில் நம்முடைய

கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்

கம்பன் பிறந்த தமிழ்நாடு

என்று மகாகவி பாரதி அன்று பாடியதைப் போல

கலைகள் செழித்த தமிழ்நாடு எம்

கலைஞர் உதித்த தமிழ்நாடு

என்று நாமும் இன்று பாடுகிறோம்.

அந்த வகையில், நமது பண்பாட்டின் மலர்ச்சிக்கு கலைகளின் எழுச்சிக்கு அடிவேராக அமைந்த அண்ணை தமிழின் வளர்ச்சிக்கு எண்ணற்ற திட்டங்களைத் தீட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

*தொடரும் . . . . .*





## தேன்துளி — 1



சங்க இலக்கியங்களில் தேன் 86 இடங்களில் காணப்படுகின்றது.

தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர் – பொரு. அடி 214
வரை தேன் புரையும் கவை கடை புதையொடு – பெரு. அடி 123
வந்தேன் பெரும வாழிய நெடிது என – பெரு. அடி 461
தேன் தூங்கும் உயர் சிமைய – மதுரை. அடி 3
வண்டு பட பழுநிய தேன் ஆர் தோற்றத்து – மதுரை. அடி 475
சாந்தில் தொடுத்த தீம் தேன் போல – நற்றிணை பாடல் எண்: 1, அடி: 4
வீ மலர் உதிர்ந்த தேன் நாறு புலவின் – நற்றிணை பாடல் எண்: 76, அடி: 7
வருந்தேன் தோழி வாய்க்க அவர் செலவே – நற்றிணை பாடல் எண்: 148, அடி: 12
புள் உற்று கசிந்த தீம் தேன் கல் அளை – நற்றிணை பாடல் எண்: 168, அடி: 3
தேன் உடை நெடு வரை தெய்வம் எழுதிய – நற்றிணை பாடல் எண்: 185, அடி: 10
சிறு வீ ஞாழல் தேன் தோய் ஒள் இணர் – நற்றிணை பாடல் எண்: 191, அடி: 1
தேன் செய் பெரும் கிளை இரிய வேங்கை – நற்றிணை பாடல் எண்: 202, அடி: 5
தீம் தேன் கொள்பவர் வாங்குபு பரியும் – நற்றிணை பாடல் எண்: 292, அடி: 3
கிழங்கு கீழ் வீழ்ந்து தேன் மேல் தூங்கி – நற்றிணை பாடல் எண்: 328, அடி: 1
கானல் பெண்ணை தேன் உடை அளி பழம் – நற்றிணை பாடல் எண்: 372, அடி: 2
தேன் தூங்கு உயர் வரை அருவி ஆர்ப்ப – நற்றிணை பாடல் எண்: 396, அடி: 2
பெரும் தேன் இழைக்கும் நாடனொடு நட்பே – குறுந் தொகை பாடல் எண்: 3, அடி: 4
பெரும் தேன் கண்ட இரும் கால் முடவன் – குறுந் தொகை பாடல் எண்: 60, அடி: 2
இனி அறிந்தேன் அது தனி ஆகுதலே – குறுந் தொகை பாடல் எண்: 84, அடி: 2
பருவ தேன் நசைஇ பல் பறை தொழுதி – குறுந் தொகை பாடல் எண்: 175, அடி: 1
ஓங்கு வரை அடுக்கத்து தீம் தேன் கிழித்த – குறுந் தொகை பாடல் எண்: 179, அடி: 4
பெரும் தேன் கண்படு வரையில் முது மால்பு – குறுந் தொகை பாடல் எண்: 273, அடி: 5
உணர்ந்தேன் மன்ற அவர் உணரா ஊங்கே – குறுந் தொகை பாடல் எண்: 297, அடி: 7
தேன் மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு – ஐங்குறு நூறு பாடல் எண்: 203, அடி: 2
பெரும் தேன் இறாஅல் சிதறும் நாடன் – ஐங்குறு நூறு பாடல் எண்: 214, அடி: 3
அரு வரை தீம் தேன் எடுப்பி அயலது – ஐங்குறு நூறு பாடல் எண்: 272, அடி: 2

## தேன்துளி — 2




வணிகப் பெயர்ப்பலகை வண்டமிழ் மொழியில் அமைவதே உவகை!

எங்கெங்கு காணினும் தமிழாகட்டும் எம்முயிர் எதுவென்று புவிகாணட்டும்!

தாய்மொழியில் கையொப்பம் இடுவோம் தமிழன்னை மடிமீது தவழ்வோம்!

தாய்மொழியில் பெயர்சூட்டி மலர்வோம் தன்னுணர்வு பொங்கி வர மகிழ்வோம்!





அவன் உள்ளத்தில் அருளறம் தோன்றி நிலைபெறல் வேண்டும் எனக் கருதி ஒரு சூழ்ச்சி செய்தார். குட்டுவன் அமைதியோடு இருக்கும் செவ்வி நோக்கி, அவனுக்கு அவன் செய்த போர் நலத்தை எடுத்தோதி இன்புறுத்துவார் போலப் பகைவரது நாடு அழிந்த திறத்தை விரித்துக் கூறலுற்றார். "வேந்தே, நீ போருக்குப் புறப்படுவாயாயின், போர்முரசம் இடிபோல் முழங்கும்; வானளாவ எடுத்த கொடிகள் அருவி போல் அசையும்; தேரிற் பூண்ட குதிரைகள் புள்ளினம்போலப் பறந்தோடும்; இப்படை புகுந்து அழிப்பதால் பகைவர் நாடுகள் கெடும் திறம் கூறுவேன்; குதிரைப்படை சென்ற புலங்களில் கலப்பை செல்லாது; யானைப்படை புக்க புலம் வளம் பயப்பதில்லை; படை மறவர் சேர்ந்த மன்றங்கள் கழுதையேர் பூட்டிப் பாழ் செய்யப்பட்டன; பகையரசர் எயில்கள் தோட்டி வைக்கப் பெறாவாயின; நின் படையினர் அந் நாடுகளில் வைத்த தீ காற்றொடு கலந்து ஊரை அழித்தமையின், வெந்து பாழ்பட்ட இடங்கள் காட்டுக் கோழியும் ஆறலை கள்வரும் வாழும் பாழிடங்களாயின, காண்" என்றார்.

பின்பொருகால் நாடு செல்கெழுகுட்டுவன் காணும் கருத்துடையனாய்ப் புறப்பட்டான். அவனுடன் கோதமனாரும் சென்றார். வழியில் நாடுகள் பலவற்றைக் கடந்து செல்லும்போது, பாழுற்றுக் கிடந்த நாடு ஒன்றைக் கண்டனர். அப்போது மறம் மிகுந்து மறலும் குட்டுவனது மனத்தை மாற்றும் கோதமனார், "இந்த நாடு பாழாய்க் கிடப்பதன் கருத்தினரான காரணத்தை யான் அறிவேன். இது முன்னாளில் வளம் சிறந்து விளங்கிற்று; இளமகளிர் குவளையும் ஆம்பலும் விரவித்தொடுத்த தழையுடை உடுத்துத் தலையில் கண்ணி சூடி மரத்தின்மேல் ஏறியிருந்து வயல்களில் நெற்கதிரைக் கவரும் கிளி முதலியவற்றை ஒப்புதற்காக விளிக்குரல் எடுத்து இசைப்பர்; அப்போது பழனக் காவில் உறையும் மயில்கள், மகளிர் பாட்டிசைக்கு ஒப்ப ஆடும் ஆரவாரம் ஒருபால் எழும்; ஒருபால் பொய்கை களினின்றும் செல்லும் கால்களில் பூத்த நெய்தலை ஊதும் வண்டினம் எங்கு மொய்த்துக் கொண்டிருக்கும்; நன்செய்களின் விளைவை வண்டியில் ஏற்றிச் செல்வர்; அப்போது வண்டியின் சகடம் சேற்றிற் புதையும்; அதனைக் கிளப்பிச் செலுத்தும் வண்டிக்காரர் செய்கிற ஆரவாரம் ஒருபால் எழும்; இந்த நாடு இத்தகைய ஆரவாரங்களைக் கேட்டது உண்டேயன்றிப் போரார வாரம் கேட்டதில்லை; இப்போது நீ சிவந்து நோக்கிய தனால் இந்த அழி நிலையை எய்துவதாயிற்று" என்றார்.

இவ்வாறு நாடுகள் சில அழிந்திருப்பது கண்ட குட்டுவனுக்கு நெஞ்சில் அசைவு பிறந்தது. "இந்த நாட்டு வேந்தர், போர் விளைந்தால் இத்தகைய அழிவு நேர்வதை அறியாது பகைத்துப் போர் தொடுத்தது. பெருங் குற்றம்; வீடிழந்தும் விளைநிலங்களை இழந்தும் எத்தனையோ மக்கள் வருத்தம் எய்தினர்; இக் கேடு எய்தக்கண்டு மக்கள் மனம் கொதித்து வருந்தும் வருத்தத்தை நினைத்தால் கன்னெஞ்சமுடையாரும் கசிந்துருகுவர்" என்ற கட்டுரையும் இப் பேச்சிடையே பிறந்தது. "அரசியற் செல்வம் சிறந்தது என்பது பொருந்தாது. நாட்டு மக்கட்கு இவ்வாறு துன்பம் எய்துவது அந்நாட்டு வேந்தர்க்குத் தீராக் களங்கமாகும்;

அந்த நாட்டவர் வேந்தர்களை எவ்வளவில் வெறுப்பார் என்பது எண்ண முடியாத ஒன்று" எனக் குட்டுவன் வாய்விட்டுக் கூறி வருந்தினான்.

இவ் வண்ணமே இருவரும் சொல்லிக்கொண்டே செல்லுங்கால், மிக்க கேடடைந்த நாடு ஒன்றைக் கண்டனர். அதனைப் பார்த்த குட்டுவன் "இதுவும் பகை வேந்தர்பால் பொருது வென்ற நாடுதானே" என்றான்; "ஆம்" எனத் தலையசைத்த கோதமனார், "வேந்தே, இந்த நாடு யான் அறிந்த நாடுகளில் ஒன்று; நின் படைமறவர் புகுந்து போர் உடற்றிக் கைப்பற்றியதற்கு முன்னும் யான் இதனைக் கண்டிருக்கிறேன்; தேர்கள் இயங்குவதால் ஏரால் உழுவதை வேண்டாதே சேறுபடும் வயல்களும், பன்றிகள் உழுவததால் கலப்பையால் உழுவதை வேண்டாது புழுதிபடும் புன்செய்க் கொல்லைகளும், மத்து உறாுவதால் இன்னியம் இயம்ப வேண்டாத மனைகளும் பொருந்திய இதன் நலத்தைப் பண்டு நன்கு அறிந்தவர், அப்போது கண்பராயின், பெரிதும் நெஞ்சு நொந்து வருந்துவர்; இந்த நாட்டு மக்கள் நல்ல மனப்பண்பு அமைந்தவர்; முருகன் வெகுண்டு அழித்ததால் செல்வக் களிப்பை இழந்த மூதூர்போல, நின் வீரர் சீறி அழித்ததால் இந் நாட்டில் மழையும் செவ்வே பெய்யாதாக, வெயிலின் வெம்மை மிகுவதாயிற்று; நாடும் நலம் பயவா தொழிந்தது; இங்கே வாழ்பவர், சீறி யழித்த நின்னையோ, நின் சீற்றத்துக்குரிய காரணத்தை உண்டுபண்ணிய தம் நாட்டுத் தலைவர்களையோ நோவாமல், இஃது அல்லற் காலத்துப் பண்பு என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்து கையைப் புடைத்துப் பிசைந்து வருந்துகின்றனர். மனைகள் பீர்க்குப் படர்ந்து நெருஞ்சி மலிந்து பாழ்பட்டுக் கிடப்பன, காண்" என்றார்.

*வளரும் . . . .*



# ஆங்கிலம் அரும்பிய அரசும் – வாழ்வும்... !

வழக்கியல் வல்லுநர் செந்தமிழ்த்திலகம் திரு. செல்லத்தம்பி
சிறீக்கந்தராசா, இலண்டன் மாநகரம்

128

## ஒரே சொல், ஒரே ஒலிப்பு, ஆனால் எழுத்துக்கூட்டல் வேறு

## Same word, same pronunciation but two permissible spellings

ஒரே உச்சரிப்புக் கொண்ட, ஒரே பொருள் கொண்ட ஒரே சொல்லுக்கு ஆங்கில மொழியில் இரண்டு எழுத்துக்கூட்டல்கள் உள்ளன. இவை எப்படி ஏற்பட்டன என்பது புரியவில்லை. வரலாறு எதுவானாலும், மாணவர்களுக்கு அது தலையிடியாகவே இருந்து வருகிறது.

பின்வருவன அவற்றுக்கான எடுத்துக்காட்டுகள்

1.Almanac – Almanack
2.Balk – baulk
3.Cauldron – Caldron
4.Carcass – Carcase
5.Cipher – Cypher
6.Connection – Connexion
7.Coolie – Cooly
8.Czar – Tsar
9.Dispatch – Despatch
10.Dike – Dyke
11.Disc– Disk
12.Ectasy – Extasy
13.Eskimoes – eskimaux
14.Gauge – Gage
15.Gipsy – Gypsy
16.Gibe – jibe
17.Grey – Gray
18.Guild – gild
19.Jail – Gaol
20.lakh – lac
21.Manikin – Manikkin
22.Mandoline – Mandolin
23.Medieval – Mediaeval
24.Murky – Mirky
25.Panka –Punkah
26.Pygmy – Pigmy
27.Racket – Racquet
28.Rhyme – Rime
29.Syrup – Sirup
30.Waggon – Wagon

## எழுத்துக்கூட்டலை ஒருசீர்மைப்படுத்த முடியாது

## Uniformity in spelling will not be possible

ஆங்கில மொழியின் எழுத்துக்கூட்டலை ஒருசீர்மைப்படுத்துவதற்கான வாய்ப்பு இனிமேல் ஏற்படும் என்று நம்பமுடியவில்லை என்று சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டு, பிரித்தானியாவும் அமரிக்காவும் தடம்மாறி வேறுவேறு திக்குகளில் பயணிக்கின்றன என்பதற்கான எடுத்துக்காட்டுகளையும் பார்த்தோம்.

அமெரிக்காவை விட்டு விட்டாலும் பிரித்தானியர்களே தம்முடைய எழுத்துக்கூட்டலை ஒருசீர்மைப்படுத்தமுடியாது என்று Bill Bryson அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்.

பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒருகணம் உற்றுப்பாருங்கள். பார்த்த பின்னர் அவற்றுள் எந்தச் சொற்கள் தவறாக எழுத்துக் கூட்டப்பட்டிருக்கின்றன என்பதை ஒருதாளில் எழுதிவிட்டு, அகராதியைப் புரட்டிப்பார்த்து எத்தனை சொற்கள் பிழையானவை என்று இனங்கண்டிருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.

Just have a keen look at the following words and write down on a sheet of paper, the words that have been mispelled. You have 10 minutes for this test. Your time starts now. :–

1. Accomodate
2. Caesarian
3. Conceed
4. Concensus
5. Disasterous
6. Diptheria
7.Embarass
8.Extasy
9. Foresake
10.Grafitti
11. Guerilla
12.Harrass
13. Idiosyncracy
14. Impressario
15. Innoculate
16. Lusterous
17. Neice
18. Opthalmologist
19. Paralell
20. Portugese
21. Procede
22. Questionaire
23. Rythm
24. Seperate
25. Spagetti
26. Supercede
27. Tarriff
28. Twelth
29.Vaccum
30. Vinyard
31.Vocal Chords

You may now stop writing and tell the number of words that have been spelt wrongly. Well, all of them have been spelt wrongly. In fact, the word "mispelled" appearing in the instruction paragraph for the above test has also been misspelled.

The above mock test was set to make the point that English language can be a maddeningly difficult language to spell correctly.

ஆங்கில எழுத்துக்கூட்டல் முறை (Orthography) எவ்வளவு சிக்கல்களை இன்னமும் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டவே மேற்படி எடுத்துக்காட்டுகளைக் காட்டினோம்.

*வளரும் . . . .*

## 6.கல்வியே அழியாச் செல்வம் . . .

இனி, அழியாச் செல்வமாகிய கல்வியை பெற்றுக் கொள்வதற்கு நாம் மிகவும் முயன்று வருவதோடு. உயர்ந்த நூல்களைக் கற்று வரும்போதே அந் நுல்களிற் சொல்லப்பட்ட நல்லொழுக்கங்களிலும் நாம் பழகி வருதல் வேண்டும். "கற்றறிவார். கண்டது அடக்கம் அடங்காதார், பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பர்" என்றபடி நாம் சிறிதும் பெருமை பாராட்டாமலுஞ், செருக்கு அடையாமலும் பணிந்த சொல்லும் பணிந்த செயலும் உடையமாய், எல்லா உயிர்களிடத்தும் அன்பும் இரக்கமுங்காட்டி, நல்லொழுக்கத்தில் வழுவாது எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளான சிவபெருமானை மனமொழி மெய்களால் நினைந்தும் வாழ்த்தியும் வணங்கியும் உலக வாழ்க்கையை இனிது நடாத்தி நாமும் பயன்பெற்றுப் பிற உயிர்களையும் பயன் பெறச் செய்து வருதலே நாம் பெற்ற அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறையாகும்.

இன்னுஞ்க்குமா இறைாததொரு பச்சிலை வார்க்குமாம் பாரக்கொளுயுதை வாகர்க்குமால் உண்ணும்போது ஒரு கைப்பிடி யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதாவே என்னுத் திருமூலநாயனார் திருவாக்கை இடையறாது நம் நினைவில் வைத்து, தம்முன் அவரவர் செயலுக்குத் தக்கபடி இறைவனையாகியும், ஆளைப் பாதுகாத்தும், ஈகை அறங்கள் செய்தும், எல்லாரிடத்தும் இன்சொற் பேசியும் ஒருதலே அழியாச் செல்வமாகிய கல்வியாலாய பயனாகும்.

கல்வியானது இருதிறப்படும் தவ உலக நூற் கல்வி, அறிவு நூற்கல்வி என்பனவாம். இவற்றுள் உலகநூற் கல்வி கூடம்மைப்ப பற்றிக்கொண்டும் அறிவுநூற் கல்வி உயிரைப் பற்றிக்கொண்டும் நடைபெறுவனவாகும். உயிரின் அறிவு விளக்கத்திற்கு உடம்பு இன்றியமையாத் துணையாய் இருத்தல்போல, அறிவுநூற் கல்வியைத் தருதற்கும் உலகநூற் கல்வி இனிற்யிமையாக் கருவியாய் இருக்கின்றது. அறிவு விளக்கம் இல்லாத உயிருக்கு உடம்பிருந்தும் பயன்பட அறிவுநூற்கல்வி பெறாதவர்களுக்கு உலகநூற் கல்வி இரு இன்றாம்.

நறுமணங்கமழத் தேன் ஒழுகி இனிய பழங்கள குலைகுலையாய்த் தொங்கும் ஒரு தேமாந் தோப்பிற்குச் செல்ல விரும்பினான் ஒருவன், அங்கே போவதற்கு இசைந்த வழியைத் தெரிந்து அதனூடே சென்று அவ்விடத்தைச் சேர்வானானால், தான் நீண்டவழி நடத்துவந்ததனால் உண்டான பயனைப் பெற்றுப் படியுங் களைப்புந் தீர்ந்து மகிழ்ந்திருப்பான், அவ்வாறன்றி அவ் வழியில் உள்ள சில புல்லிய காட்சிகளையே கண்டுகொண்டு உடம்பிலுள்ள வலிமை குறையும் நேரம்வரையில் வழியிலேயே காலங்கழித்துவிடுவானாயின், மிகுந்த பசியுங் களைப்பும் வந்து மூடிக்கொள்ள மேற்சொல்ல மாட்டாதவனாய் அவ்வழியினிடையே சோர்ந்து விழுந்து உயிர் இறப்பான்.

அதுபோலவே, அறிவுநூற் கல்வியைப் பெறுதற் பொருட்டாகவே வந்த இம்மக்கள் யாக்கையி லிருந்தும், முடிவாக அதனை அடைதற்கு முயலாமல் உலகநூற் கல்வியளவில் ஒருவன் நின்று விடுவளானால், அவனெடுத்த இம் மக்கட்பிறவி வெறும் பாழேயாவது திண்ணம் உயிரானது தன்கண் உள்ள அறியாமை முற்றுந் தொலையப் பெற்றுப் பேரறிவு விளக்கம் உடையதானவுடனே பிறவி எடுத்தலும் நின்றுபோகும். உயிர்கட்கு உடம்புகள் அடுத்தடுத்து வருவதெல்லாம் அவ் வுயிர்களைக் கவிந்து நின்ற அறியாமையை நீக்கி அறிவை எழுப்புதற் பொருட்டாகவே யாகலான், அறியாமை நேய்ந்து அறிவு எழும் வரையில் அவை பிறவிகளிற் சுற்றிச்சுற்றி வரும். ஆகவே, அறிவுநூல்களைக்கற்று ஆறியாமையை நீக்காதவன் மேன்மேற் பிறவியெடுப்பன்னாய் இருத்தலின், அவன தனக்கு உடம்புகளைப் படைத்துக் கொடுப்பதான ஒயாத வேலையைக் கடவுளுக்குத் தருபவன ஆவன், இது குறித்தன்றோ பட்டினத்தடிகளும்,

"மாதாஉடல் சலித்தாள் வல்வினையேன் கால் சலித்தேன

தேவாவுங் கைசவித்து விட்டானே –

நாதா இருப்பையூர் வாழ்சிவனே

இன்னுமோர் அன்னைக் கருப்பையூர் வாராமைக் கா"

என்று அருளிச்செய்தனர்.

மேலும், உயிர்க்கு உறுதிதரும் அறிவுநூற் கல்வியைக் கல்லாது, உடம்பைப் பாதுகாத்தற்குமட்டும் பயன்படும் உலகநூற் கல்வியைப் பயில்வது வெறுங் கூவுதலாகவே முடியும். ஏனென்றால், நிலையாயுள்ள உயிரின் தன்மையை நாடாது, நிலையின்றிச் சில நாளிலோ சில திங்களிலோ அல்லது சில ஆண்டுகளிலோ மறைந்து போகும் உடம்புக்கு உணவு தேடிக் கொடுத்தற்கு மட்டும் பயன்படுகின்ற உலகநூற் கல்வியை வாய்ஓயாது கூலிக் கற்றல் நிலையான பயனைத் தராமையின் அது வெற்றொலியோய்ப் போவதன்றி வேறு அது தரும் பேறு என்னை ? இவ்வுண்மையை உணர்த்துகற்கன்றே,அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாதுலகந்நூல் ஒதுவதெல்லாங் கொண்டு தடுமாற்றம் கூந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம் போஒந் துணையறிவார்இல் என்று நாலடியார் கூறுவதாயிற்று.

***வளரும் . . . .***



# பொன்வண்டு

எட்கர் அல்லன் போ

பெ நா அப்புஸ்வாமி மொழிபெயர்த்தது

10

எங்கள் வரவை லெக்ராந்து மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பரபரப்பாய், ஒருவகைக் கிளர்ச்சியோடு என் கையை இருகப்பிடித்தான். அந்தச்செயல் எனக்குச் சற்று அச்சத்தையே தந்தது. நான் ஏற்கனவே கொண்டிருந்த சந்தேகங்களை உறுதிப்படுத்தியது .அவன் முகம் வெள்ளை வெளேரென்று ,பேய் வெளுப்பாக, வெளுத்திருந்தது. அவன் கண்கள் குழிந்துகிடந்தன. ஓர் அசாமானியக் காந்தியோடு சொலித்தன. அவனுடைய உடல் நடத்தைப்பற்றி விசாரித்தான பிறகு பேச்சை எப்படித் தொடங்குவது என்பதே எனக்குத் தெரியவில்லை. அதனால் லெப்டினன்ட் ஜி யிடமிருந்து அந்த வண்டை வாங்கிக்கொண்டு வந்து விட்டாயா என்று கேட்டேன்.




அவன் முகம் சட்டென்று சிவந்தது. ஆகா அப்பொழுதே ஆய்விட்டதே என்றான். மறுநாள் காலையிலேயே அவனிடமிருந்து அதை வாங்கி வந்துவிட்டேன். இனிமேல் யார் என்ன கொடுப்பதாய்ச் சொன்னாலும் நான் அந்த வண்டை மட்டிலும் கொடுக்குச் சம்மதிக்கமாட்டேன். ஜூபிடர் அதைபற்றிச் சொன்னானே, அது முற்றும் சரி என்று உனக்குத் தெரியுமா ?

அவன் என்ன சொன்னான், என்று கேட்டான். என் நண்பனின் பேச்சையும் நடத்தையையும் கண்டதும் என் மனத்திலே வருத்தமும் கவலையும் கிளைத்து எழும்பின.

அந்த வண்டு முழுப்பொன் என்று அவன் சொல்லவில்லையா ? என்று அறிக்கையாக அவன் பதில் சொன்னான். அவன் அதை உண்மை என்று நம்பியவனைப் போல் பேசக் கண்டதும் எனக்குப் பகீர் என்றது.

இந்த வண்டைப்பற்றி என்ன நினைக்கிறாய் ? இது என் செல்வச்சுரங்கமாக விளங்கப்போகிறது என்றான் தன் குரலில் ஒரு வெற்றியோடு, அவன் முகத்தில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. என் குடும்பம் இழந்த செல்வத்தை இந்த வண்டு மீட்டிக் கொடுக்குப்போகிறது. அப்படிப்பட்ட வண்டை நான் பாராட்டுவதில் வியப்பு என்ன ? அதிர்ஷ்டலக்ஷ்மியின் கடாக்ஷத்தால் அல்லவோ இது எனக்குக் கிடைத்திருக்கிறது? இதைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டியது என் கடமை.

எனக்குக் கொள்ளை கொள்ளையாகப் பொன் கிடைக்கப்போகிறது. என்பதை இந்த வண்டின் பத்தரைமாத்துப் பொன்மேனி குறிக்கிறது. அது எனக்கு நன்றாய்த் தெரியும். முன் இழந்த பொன்னை என் முயற்சியால் மீண்டும் பெறப்போகிறேன். ஜூபிடர், அந்த வண்டை இங்கே எடுத்துவா, என்றான் லெகிராந்து.

என்ன ? வண்டையா எசமான் ? அந்த வண்டின் வழிக்கு நான் ஒருநாளும் போகமாட்டேன். உங்களுக்கு வேண்டுமானால் நீங்கள் போய்த்தான் அதை எடுத்துக்கொள்ளவேன்டும் என்று ஜூப்பிட்டர் மாதிரி சொல்லவே, லெகிராந்து கம்பீரமாக எழுந்திருந்தான். மெதுவாக நடந்து சென்றான். வண்டை வைத்திருந்த ஒரு கண்ணாடி கூட்டைத் திறந்து அதிலிருந்து வண்டை எடுத்து என்னிடம் கொடுத்தான். அது மிகவும் அழகாயிருந்தது. அந்தக் காலத்து இயற்கை நூல் விற்பன்னர்கள் ஒருவரும் அதைப் பார்த்ததும் இல்லை. விஞ்ஞான முறையில் அதை மதிப்பிட்டால், அது அவ்வளவு உயர்ந்த பொருள் இல்லை, அதன் முதுகிலே ஓர் ஓரமாக இரண்டு வட்டப் புள்ளிகளாம். மற்றோர் ஓரமாக நீளப்புள்ளி ஒன்றும் இருந்தது. ஆனால் அதன் செதில்கள் கடினமாயிருந்தன. பளபள என்று சொலித்தன. மெருகிட்ட பொன்னைப்போல் ஒளி வீசிய அந்தப் பூச்சியில் கனமும் ஆச்சரியப்படும்படி இருந்தது.

எல்லாவற்றையும் பார்த்தால், ஜூபிட்டர் கொண்ட எண்ணம் தப்பானது என்று அவனைக் குறை சொல்ல இடம் இல்லை. ஆயினும் விசயம் தெரிந்த லெகிராந்து அந்த அபிப்பிராயத்தை முற்றிலும் ஒப்புக்கொண்டது எப்படி என்பதைப்பற்றி நான் எவ்வளவோ யோசித்துப் பார்த்தும் எனக்கு விளங்கவில்லை.

நான் வண்டைப் புரட்டிப் பார்த்துச் சோதித்து முடிந்தவுடன் என் நண்பர், நான்தான் உனக்குச் சொல்லிஅனுப்பினேன் என்று மிகவும் கம்பீரமாய்த் தொடங்கினான். அது எதற்காக என்றால் விதியும் வண்டுமாய் ஒன்று சேர்ந்து வெளியிடும் கருத்தை நிறைவேற்றி வைப்பதற்கு உன்னுடைய ஆலோசனையும் உதவியும் எனக்கு வேண்டும். அதனால், என் அருமை லெகிராந்து உனக்கு இப்பொழுது உடம்பு சரியாயில்லை, அதனால் நீ கொஞ்சம் முன்சாக்கிரதையாக இருப்பது நல்லது, நீ போய்ப் படுத்துக்கொள், கொஞ்சம் களைப்பாறு, உனக்கு இந்த நோய்க்குறி மாறும் வரையில் சிலநாள் வேண்டுமானாலும் நான் இங்கே இருக்கிறேன், உனக்கு இப்பொழுது சுரம் அடிக்கிறது. அதோடு என்று நான் குறுக்கிட்டுக் கூறினேன்.

*வளரும் . . . . .*



# நற்றிணை– ஆங்கிலம் !


பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்

சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர், தமிழ்நாடு அரசு


150

## நற்றிணை—34

### தோழி சொல்லியது

**குறிஞ்சி** **பிரமசாரி**

கடவுட் கற்சுனை அடை இறந்து அவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தள்
குருதி ஒண் பூ உரு கெழக் கட்டி,
பெரு வரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன் இயத்து ஆடும் நாடன்
மார்பு தர வந்த படர் மலி அரு நோய்
நின் அணங்கு அன்மை அறிந்தும், அண்ணாந்து,
கார் நறுங் கடம்பின் கண்ணி சூடி,
வேலன் வேண்ட, வெறி மனை வந்தோய்!
கடவுள் ஆயினும் ஆக,
மடவை மன்ற, வாழிய முருகே!

## Natrinai — 34

### MAID FRIEND SPEAKS

**KURINCHI** **PIRAMACHARI**

O, Muruka! Divine is Green Hill!
She, a Sura lass combs the leaves; culls
nymphaea odorota; obstacles it
with red kantal evenly on her locks;
to cataract tunes, she pirouettes and strums!
Hill Lord has crushes on her! On him
her breasts do have! See Love struck is she,
by thee! Why fly
to Frenzy Fora!
Cadamba Priest pulls you by offer?
O,Vela! Love is tumescent!
Aren't you hot?
Urgent you be!

*To Continue...*



# திறமையான வங்கி நிர்வாகி வள்ளியப்பா!

முனைவர் தேவி நாச்சியப்பன்

159

இந்தியன் வங்கியில் பணியாற்றிய கடியாபட்டி திரு.ராம. சொக்கலிங்கம் அவர்கள் குழந்தைக் கவிஞரைப் பற்றி 30.04.2002 ல் எழுதிய கட்டுரை.

## திறமையான வங்கி நிர்வாகி வள்ளியப்பா

---

இந்தியன் வங்கி, காரைக்குடி கிளையில் அழ. வள்ளியப்பா மேலாளராகவும் (Manager) நான் கணக்காளராகவும் (Accountant) வேலை பார்த்தோம்.



வள்ளியப்பா அலுவலகத்திற்கு ஒரு நாள்கூட காலையில் நேரம் கழித்தோ, மாலையில் குறைந்தது ஆறு மணிக்கு முன்போ சென்றதில்லை. காலை 9 மணிக்கு அலுவலகத்துக்கு வந்து விடுவார்கள். மதியம் சிற்றுண்டியும் வீட்டிலிருந்து கையோடு எடுத்து வந்து அலுவலகத்தில் உண்பார்கள். வேலை பார்ப்பவர்களும் அவர் போல் நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். யாரும் நேரம் கழித்து வந்தாலும் அலுவலக நேரத்திற்கு முன் வேலைகளை முடிக்காமல் சென்றாலும் அவர்களைக் கண்டிப்பார்கள். அவர்கள் செய்த வேலைகளில் குற்றம் குறைகள் இருந்தாலும் சுட்டிக்காட்டித் திருத்துவார்கள்.

கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கச் சென்றால்கூட அலுவலக விடுமுறை நாட்களில் தான் செல்வார்கள்.

அலுவலக ஊர்தியை (Car) அலுவலக வேலைகள் தவிர, தன் சொந்த வேலைகளுக்குப் பயன்படுத்த மாட்டார்கள். யாருக்கும் வளைந்து கொடுக்க மாட்டார்கள். வங்கி விதிகளை மீறாமல் வங்கி வைப்புத் தொகைகளை அதிகரித்தும் கொடுத்த கடன் தொகைகளை வசூல் செய்தும் மேலும் நல்ல இனங்களுக்குக் கடன் கொடுத்தும் வங்கியை நன்கு வளர்ச்சி அடையச் செய்தார்கள்.

காரைக்குடி கிளை மேலாளர் பதவியில் இருந்து காரைக்குடி வட்டார மேலாளர் (Area Manag-er) என்ற பதவி உயர்வு பெற்றுப் பின் ஓய்வு பெற்றார்கள். ஆக மொத்தத்தில் ஒரு சிறந்த நிர்வாகி.

என் தகப்பனார் வழி ஐயா (பாட்டனார்) சொ.தீ.சொ.தீ சொக்கலிங்கம் செட்டியார் என்ற நாகப்ப செட்டியார் ஏற்படுத்திய கடியாபட்டி ஸ்ரீபூமீஸ்வரசுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியின் பழைய மாணவர் கவிஞர் வள்ளியப்பா என்று நான் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

நேர்மையைக் கொண்டு நேர்மை காண்பவர்.



## செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

168

## பதினோராம் திருமுறை–12

### நம்பியாண்டார் நம்பிகள்



திருநாரையூரில் அவதரித்த நம்பியாண்டார் நம்பிதான், முதல் ஏழு திருமுறைகளையும் சிதம்பரம் கோயிலில் இருந்து எடுத்துப் பிரித்துத் தொகுத்துத் தந்தவர்; சோழ மன்னன் இராசராச அபயகுலசேகரின் உதவியுடன் கோவில் சென்று வெளிக்கொணரப்பட்டதால்தான் அவரால் திருத்தொண்டர் திருவந்தாதி எழுத முடிந்தது. அதன் துணைக்கொண்டு சேக்கிழார் பன்னிரெண்டாம் திருமுறையாகக் கருதப்படும் பெரிய புராணம் அவரால் உருவாக்க முடிந்தது. சுந்தரரின் திருத்தொண்டத் தொகையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் துணை நிற்க உருவானது திருத்தொண்டர் புராணம்.

நம்பியாண்டார் நம்பி, சிவனின் மகன் விநாயகரை திருநாகூரில் உள்ள பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெற்று திருவிரட்டை மணிமாலை பாடினார். ஆளுடைய பிள்ளையார், திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர், திரு ஏகதசமாலை, திருவடி வகுப்பு எனப் பல பாடல்களை பாடி பரம்பொருள் அருள் பெற்றவர்; திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம் மற்றும் திருத்தொண்டர் திருவந்தாதி எனப் பல அடியவர்களின் பாடல் தொகுப்புகளைப் பாடியுள்ளார். நம்பியாண்டார் நம்பிக்கு ஆளுடைப் பிள்ளையாராகிய திருஞானசம்பந்தரிடம் மிகுந்த பற்றிருந்தது; அதனால் சம்பந்தரை

"பொருள் என என்னை தன் பொற்கடல் காட்டிப் புகுந்து எனக்கு இங்கு அருளிய சீர்திரு ஞானசம்பந்தன்"

என்று பாடி அடியார்க்கு அடியானாகத் தன்னை வெளிப்படுத்தி இருக்கிறார். அவரைப் பற்றி மட்டும் ஆறு பிரபந்தங்கள் பாடிப் பரவசப்படுத்துகிறார். அவருடைய பத்தாவது பனுவலாக திருநாவுக்கரசு சுவாமிகளைப் பற்றிய திருஏகதசமாலை என்னும் தொகுப்பில் அவரின் வரலாற்றினை வணக்கத்துடன் வாழ்த்தியிருப்பார். ஏகம் என்பது ஒன்று தசம் என்பது 10 என்பதால் 11 பாடல்கள் என்பதை ஏகதசமி என குறித்து இருப்பது அக்கால பக்தி இலக்கியங்களில் வடமொழிச் சொற்களும் மணிப்பிரவாளமாக எழுதப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டுகிறது. நம்பியாண்டார் நம்பி தான் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் சோழ மன்னனான முதல் ஆதித்தினைப் பன்முறையும் பாராட்டி கூறுவார். அதனால் அவர் காலம் அவ்வேந்தன் வாழ்த்தி கிபி 890–க்கும் 907–க்கும் இடைப்பட்டதாக இருக்கலாம் எனத் திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் எழுதியுள்ளார்கள். நம்பியாண்டார் நம்பிகளைப் பாராட்டி, அவரின் சொல்லாராய்ச்சி, அணி பல தொடுத்தல், பழமொழி வழக்கம் ஞான நூற் புலமை எனப் பல துறையிலும் சிறந்து இருந்தார் எனத் தமிழ் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

திருத்தொண்டர்த் தொகையில் தில்லைவாழ் அந்தணர்கள் அடியார்க்கும் அடியேன் எனத் தொடங்கும் திருப்பாட்டில் தில்லைவாழ் அந்தணர் முதல் அமர் நீதி நாயனார் ஈராகத் தொண்டர்கள் எழுவர் குறிக்கப்படுகின்றனர். மிக நுண்மையுடன் தெளிவாகவும் கவனமாகவும் பக்தி பரவசமுடன் வரலாற்றினை அவர் எழுதியிருப்பதை அடியொற்றிப் பெரியபுராணம் எழுதப்பட்டுள்ளது என்பதே இவரின் அறிவாற்றலுக்கு வேறு சான்று தேவையில்லை. சிவன், தன்னை மீட்டுத் தந்தார் என்பதை "அவ நெறியில் இருந்த என்னை வாங்கித் தவநெறியில் புகுவித்தான்" எனக் கூறியுள்ளார். இவரின் விநாயகர் மணிமாலையின் ஒரு பாடலைக் காண்போம்.

"உலகத்தின் எல்லை புகுவிப்பான் ஈன்றவர் நெல்லை செங்கழுநீர் கட்டும் திருநாறையூர் சிவனின் சேய் என விநாயகரை வாழ்த்தி, இந்த ஐங்கரத்து மன்னன் இதிகாசங்களைத் தன் கொம்பினால் எழுதியவர்" எனப் புராணக்கதை மூலம் வாழ்த்துகிறார்.

"திருநாரையூர் சிவனின் செல்வந்த புத்திரன் நெல் கலைந்து குவிக்கும் திருநாரையூர்" என உரைத்து, முக்கண்ணனின் மகன் நம் அல்லல்களைத் தீர்ப்பவன், கைலாயத்திற்குச் செல்லும் நல்வழியை நமக்கு சுட்டிக்காட்டுவான்; எனவே விநாயகரை வணங்கி வீடு பேறு பெறுவீரென நம்பியாண்டார் அவர்கள் நமக்கு நல்வழி காட்டி உள்ளார். விநாயக மணிமாலையில் இப்பாடல் அமைந்துள்ளது.

"அல்லல் களைந்தான்தன் அம்பொன் உலகத்தின்
எல்லை புகுவிப்பான் ஈண்டுழவர்—நெல்லல்களை
செங்கழுநீர் கட்கும் திருநாரையூர் சிவன்சேய்
கொங்கெழுதார் ஐங்கரத்த கோ"

என வெண்பாவாகப் பாடலை எழுதியுள்ளார் நம்பியாண்டார் நம்பி அவர்கள்.

*வளரும் . . . . .*



பெரும் பேராசிரியர் செ.இரா.செல்வகுமார்
கனடா

119

பல திரைப்படப் பாடல்கள் தவறான வரிகள் கொண்டுள்ளன. பழைய திரைப்படப் பாடலான 'அந்திமழை பொழிகின்றது' என்ற பாடலில் சரியாக "ஒவ்வொரு துளியிலும் உன்முகம் தெரிகின்றது" என்று வரும். தற்காலத்தில் பலரும் தவறாகப் பயன்படுத்துவதைப் பார்க்கின்றேன். இத்தவற்றைச் செய்யாதிருக்க வேண்டுகின்றேன். (தவற்றை என்றெழுதுங்கள் தவறை என்னாதீர்கள்!! ஆற்றைக் கடத்தல், வரலாற்றைப் பாருங்கள் போன்று வருதல் வேண்டும்). மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் திரைப்படப் பாடல்களை இன்னும் கூர்மையாகப் பார்க்கவேண்டும் என்பது என் கருத்து.



இன்றைய இலக்கியத்தில் முக்கியமான இடம் கொண்டது. கண்ணதாசன், வாலி, பட்டுக்கோட்டையார் என்று பற்பல கவிஞர்களின் பாடல்கள் வெறும் வெற்று வரிகள் அடங்கியவை அல்லவே. பலவும் பல நல்ல கருத்துகளை அழகுற இசையுடன் தாங்கி வந்தவையாயிற்றே! ஒவ்வொரு பூவிலுமே என்றெழுதியிருக்கலாமே! இன்னும் பலவிதமாகவும் எழுதியிருக்கலாம்! தமிழில் சொற்களுக்கா பஞ்சம்! தன் அறியாமையும் தவறும் poetic license ஆகாது.

எழுத்தாளர் செயகாந்தன் "ஒரு உலகம்" என்று சொன்னது வேண்டுமானால் அமைதி கூறத்தக்கது. இருவேறு விதமாக அமைதி சொல்லலாம். இது மட்டுமல்ல இன்னும் சில பாடல் வரிகளிலும் இதே தவறு. ("ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறது" என்று ஒருமையில் வேறு முடிக்கின்றார்!! கொடுமை! ஒவ்வொரு பூவுமே சொல்கிறது என்றிருக்க வேண்டும்)

அந்திமழை பொழிகின்றது என்னும் இந்தப் பாட்டில் சரியாகச் சொல்லியுள்ளார்கள். "ஒவ்வொரு துளியிலும் உன்முகம் தெரிகின்றது"

தொல்காப்பியத்திலேயே இசைக்காக சில சொற்களைத் திரிக்கலாம், சில மாத்திரை விதிகளைத் தளர்த்தலாம் என்று விதி இருக்கின்றது. அன்பு என்பது அம்பு என்று வரலாம் (தண்டபாணி தேசிகர் பாட்டில் காணலாம்), மாத்திரை அளவுகள் நீளலாம், குறுகலாம். ஆனால் ஒவ்வொரு பூக்கள் போன்ற மிகத் தவறானதற்குச் சான்றுகள் இருக்கின்றனவா அறியேன்...ஒரு பூக்கள் என்று சொல்வதைப் பொறுத்தல் ஆகாது, அமைதி ஏதும் சொல்லலாகாது.





மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

## 3. பொருள் நிலை . . .

## செல்வப் பேரன்பர்களே !

நிலையில் தாழாமைக்குச் செய்த குறள்களின் நினைப்பும், நிலை வளர்ச்சிக்குச் செய்யுங் குறள்களிடை அழுத்தமும், செய்குறள்கள்மேல் ஒட்டமும், வேண்டுமாதலின். குறளொதுக்கம் யாண்டும் யார்க்கும் அமையாது காண். மேலும் ஒரு பெரு நூலகத்துக்குப் புகுவார்க்கு இருநிலை உரியன. ஒன்று கல்விநிலை; ஏனையது அறிவு நிலை. வள்ளுவர் ஞாலமக்களைப் பகுத்து உணர்ந்த முறை யாது? புறத்தும் அகத்தும் கண்ட மக்கள் நிலைகள் யா? நிலைக்கேற்ப விதித்த வழிகள் யா? உளம் பதிப்பான் ஆளும் சொற்களும் நடைகளும் யா? என ஆசான் அறிவைக் காண்பது கல்விநிலை. இஃதோர் பரந்த முழுக்கல்வி. ஆசிரியன் நெஞ்சங் காண்பதற்கு அவன் செய்த முழுநூற் கல்வி இன்றியமையாதது. இங்ஙன் திருக்குறளைக் கற்றபின், அப்பெருமகன் கண்ட மக்களுள் யான் யார்? நிலைகளுள் என் நிலை யாது? வழிகளுள் எனக்குரிய செயல்வழி எது? எனத் தன்நிலையோடு ஒட்டிய குறட் காட்சியே அறிவுநிலை எனப்படும். இந்நிலையறிவே செயலூக்குகிறப்பது. "சுற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற குறளடி இவ்விரு நிலையையும் ஒருங்கு சுட்டுவது. இதுவே நூல் புகுமுறை யாதலின், கல்வி நிலையில் திருக்குறளை முழுதும் என்றும் சாந்துணையும் கற்க; அறிவு நிலையில் தன்நிலைக்கு ஏற்ற செயற்குறள்களையே நீடு நினைக! நினைவுத் திட்பம் பெறுக. கற்பார் நிலையுயர்வே வள்ளுவர் எழுத்துப் பயன் ஆகியர்.

குறள் நண்பர்களே! இனி இன்று மேற்கொண்ட பொருள் நிலைத் தலைப்புப்பற்றி உரை செய்வேன். பொருள் செயல்வகை, நன்றியில் செல்வம், நல்குரவு. ஒப்புரவறிதல், ஈகை, ஊழ். ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை என்ற அதிகாரங்களில் பலவாகவும், பிற தலைப்புடைய அதிகாரங்களில் சிலவாகவும், பொருட் குறள்கள் பரந்து கிடக்கின்றன. பொருளினை விழைந்தும் வெறுத்தும். பொருள் காரணமாய் மக்களை அறிவுறுத்தியும், புகழ்ந்தும், இகழ்ந்துமாகப் பலநிலைகளில் குறள்கள் பிறந்திருக் கின்றன. பொருள் இன்றியமையாமையை முழுதுணர்ந்த வள்ளுவர் பொருளின் ஆற்றலை, அது நன்மையினும் தீமைக்குக் கருவியாதலை ஒரு ஞான்றும் மறந்தவரல்லர்.

பொருளிலாதவன் தன் இன்மை துடைப்பான், மனத்தூய்மை கெடுத்துப் பொருளீட்டு கிறான். உடையான் தனிப் பெருஞ் செல்வனாக. எல்லாம் தனதாக, மனம் ஒன்று உண்டு என்பதையும் மறந்து பொருள் குவிக்கிறான். பொருள் என்பது யாது? அதன் பயன் யாது? அதனை ஈட்டும் நெறி யாது? பொருட்கும் தன்னிலைக்கும் உரிய தொடர்பு யாது? வாழ்க்கைக்கு வேண்டும். அளவு யாது? பொருளுக்கும் மனத்தூய்மைக்கும் பொருந்திய அடிப்படை யாது? என்றெல்லாம் மக்கள் வினவிக் கொள்வதில்லை. பொருள் இன்றியமையாதது என்பதற்காக, அதற்கோர் ஒழுக்க வரம்பின்றா போய்விடும்! உடலும் கல்வியும் அறிவும் இன்றியமையாதனவெனினும் அவற்றின் வளர்ச்சிக்கும் ஒழுக்க வரம்பு உண்டன்றோ?

இன்றியமையாப் பொருளை ஈட்டற் கண்ணும் செலவிடற் கண்ணும் மக்கள் உறும் பல மாசுகளைக் கண்ட வள்ளுவர் "பொருளல்லது இல்லை பொருள்" என்று சிறப்பித்த வள்ளுவரே – யாது கூறினார்? 'பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள* (241) என இழித்துரைத்தார். 'பழி மலைந்து ஆக்கம் எய்துவதைக் காட்டினும், கழி நல்குரவே தலை' (657) எனப் பொருளுடைமை யினும் புகழுடைமை காட்டினார். மனம் அழுக்குறினும் உறுக என்று பொருளீட்டல் நன்றா? பொருள் வாராதொழியினும் ஒழிக என்று மனத் தூய்மை காத்தல் நன்றீர்? என வள்ளுவரை வினவின்,

இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல் (961)

என நேர்விடை இறுப்பர். பேதை. கற்றான். அறிவுடையான் என்ற வேறுபாடின்றி மக்கள் மனங்களெல்லாம் பொருளொன்றின் மேலதாய் அழுக்கடையக் கண்ட ஆசிரியர். தாம் தூய்மை சொல்லும் இடம் பொருட்கண்ணது என்று துணிந்துவிட்டார். தனித்தோர் வாழ்வு ஆகுக. தொண்டு செய்வான் தோற்றிய கழகங்கள் ஆகுக. அவைகள் ஆகுக, பேரரசுகள் ஆகுக. பொருளில் ஒரொழுங்கு யாண்டுக் காணப்படுமோ ஆண்டு மனவொழுங்கும் நாணய மதிப்பும் காணப்படும்.

*வளரும் . . . . .*



# தமிழன்னை நான்மணிமாலை


*செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு*

சங்க இலக்கிய ஆய்வறிஞர்


61

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்ற தறம்.**

பொறாமை, பேராசை, சினம், துன்பச்சொல் எனும் நான்கும் இழுக்கு தராதவாறு செய்யப்படுவதே அறம் என்பது தெய்வப்புலவர் கூற்று. பிறகு உன்னுள்ளேயே ஊறிவரும் அன்பின் ஊற்று. இவை நான்கும் ஊனிலும் உள்ளத்திலும் அன்பு வளர்வதைத் தடுப்பவை. எத்தனை செல்வம் இருந்தாலும் வாழ்வில் பிணிகளையே கொடுப்பவை. இவற்றில் எதுவொன்று இருப்பினும் ஒருவன் அறவோன் என்று சொல்லத் தகுதி அற்றவன். இவற்றை முற்றிலும் விலக்குபவனே யாவர்க்கும் உற்றவன்.

பொறாமை அடிப்படை ஒழுக்கத்தையே குலைக்கும். பொறாமையால் செய்யப்படும் தீங்கு வாழ்நாளெல்லாம் மனத்தை உலைக்கும். பேராசை கொண்டவன் காண்பவற்றையெல்லாம் அடைந்திட ஓடிக் களவிலும் ஈடுபடுவான். பெருங்குற்றங்கள் செய்து தானே கெடுவான். சினம் கொண்டவன் சிந்தை கொந்தளித்துச் சீரழிவான். செல்லும் இடங்களிலெல்லாம் இழிவான். துன்பந்தரும் சொற்களால் பிறரை வருத்துபவன் வெறுக்கப்படுவான்.

அறம் செலுத்தும் தீயினால் கருக்கப்படுவான். இந்த நான்குமே ஒருவன் நெஞ்சில் குழுமினால் என்னாவான் ? தான் பட்ட அல்லல்களுக்கு ஊழ்வினையைக் காட்டி நோவான். எல்லாமும் தெய்வப்புலவர் திருமொழியால் தெரிவித்து என்னைத் தெளிவித்தாள் தமிழன்னை. துலக்கிக் கொண்டேன் என்னை. நன்மைகள் தந்தமைக்காக அன்னைக்குச் சூட்டுகிறேன் நான்மணிமாலை !

## அகவல்

களித்தேன் தமிழில் கனிச்சுவை அறிந்தேன்
அளித்தேன் பாடல் அன்னையின் அருளே
விளித்தேன் அன்னையை வித்தகி என்றே
தளிர்த்தேன் கிளைத்தேன் தமிழால் நிலைத்தேன்
அழைத்தேன் அன்னையை ஆயிரம் முறைநான்

பிழைத்தேன் விளைத்தேன் பிடித்தேன் இடத்தை
அசைத்தேன் பலரின் அசையா மனத்தை
இசைத்தேன் பாக்கள் இணைந்தேன் அவைகளில்
தொடுத்தேன் பலவாய் தூயநற் பாக்கள்

கொடுத்தேன் உரைகளும் குறைத்தேன் செருக்கும்
உழைத்தேன் நாளும் உரைத்தேன் அறத்தைக்
குழைத்தேன் சாந்தினைக் குறையிலா திங்கே
அமைத்தேன் எனக்கென அருந்தமிழ்க் களத்தை

இமைத்தேன் தமிழால் இணைத்தேன் நட்புகள்
வளர்த்தேன் உறவை வகுத்தேன் வரைமுறை
களைத்தே னில்லை கடும்பணி யாலும்
கணித்தேன் வரவைக் காத்தேன் மனத்தைப்

பணித்தேன் எனையே பன்முக நோக்கில்
செவித்தேன் பருகும் செயலால்
அவித்தேன் புலனை அடைந்தேன் புகழே !

## 65

## வெண்பா

புகழும் கொடுத்தாள் புலமை வளர்த்தாள்
தகைமை உயர்த்தித் தழைத்தேன் – அகத்தில்
துணிவும் பெருக்கித் துடிக்கும் உயிரில்
அணியெனக் கொண்டேன் அறம்.

## கலித்துறை

அறமே நிலைக்கும் அணியாய் விளங்கும்
அழகுறவே
திறமும் வழங்கும் திடமும் கொடுக்கும்
திகழ்தமிழே
மறவேல் தமிழை மதியில் நிறைப்பீர்
மயல்விலக்கி
இறவாப் புகழை இயற்றிக் கொடுக்கும்
இலங்கிடவே.

## விருத்தம்

இலங்கும் வாழ்வில் இரவும் பகலும்
இறைஞ்சிக் கேட்டேன் இறைவியிடம்
நலங்கள் தந்தாள் நயமும் தந்தாள்
நலிவும் தீர்த்தாள் நவையிலனாய்த்
துலங்கும் நெஞ்சில் துதைந்த அறிவால்
துயரும் நீத்தேன் துணைகொடுத்தாள்
நிலங்கள் எங்கும் நிறைவாய் நடந்தேன்
நினைவில் தூய நெறியுடனே!



# உலகு தழுவிய பொதுநோக்கு நூல் - திருக்குறள் !

புலவர் தி.வே. விஜயலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்.,

47

தமிழர் பண்பாடு, உலகம் தழுவிய பொதுநோக்கு உடையது என்பதை அறிவிக்கும் பொதுநூல் திருக்குறள். மனிதன் மனிதனாக வாழ வழிமுறைகள் வகுத்துத் தந்துள்ள வாழ்க்கைநூல். சமயச் சார்புகள் எதுவும் இல்லாமல், கதைக் கவர்ச்சிகள் சிறிதும் இல்லாமல் காலம் கடந்து நிலைத்து நிற்கும் தமிழ்நூல். சர் ஆல்பர்ட் ஸ்விட்சர் என்ற மேலை நாட்டறிஞர், "இந்திய நாடு தன் சிந்தனையும், அதன் வளர்ச்சியும்" என்ற நூலில் உயர்ந்தஞானத்தைச் சிறந்த முறையில் கூறும் திருக்குறள் போன்ற அறநெறிக் கோவை உலகத்தில் எங்கும் இல்லை என்று பாராட்டுகிறார்.

சொற்களை ஆய்ந்து, ஆய்ந்து, தேர்ந்து, தேர்ந்து செய்யப்பட்ட பாக்கள் தொகுதியான இந்நூல் ஆழ்ந்த பொருளைத் தருவது. அதனால்தான், காலந்தோறும் அறிஞர் பெருமக்கள் அவரவர் நோக்கிற்கும், போக்கிற்கும் ஏற்ப நயவுரைகளை நல்கி வருகின்றனர். மிகச் சில சொற்களில் பரந்துபட்ட பொருளைச் சொல்லும் குறளைச் சிறப்பிக்க எண்ணிய இடைக்காடர் என்ற புலவர் "கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி, குறுகத் தரித்த குறள்" என்றார். பல உரைகளைக் கண்டதும் பல வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட சீர்மையும் கொண்ட ஒரே நீதிநூல் "உலகப் பொதுமறை" ஒன்றே.

## திருக்குறள் ஒரு வழிகாட்டி நூல்:

திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல். எந்நாட்டவரும் எச்சமூகத்தவரும் எச்சமயத்தவரும் எவ்வினத்தினரும் அறம் போன்ற உறுதிபொருள்களை ஒருங்கே பெற்று வாழ வழி காட்டும் நூல் உலகில் திருக்குறள் ஒன்றே. இந்நூல் போல் வேறு எந்நூலும் வழிகாட்டாது என்பதை நாம் அறிய வேண்டும், உலகமும் அறிய வேண்டும். உலகம் பண்புமிகுந்த குடும்பம்.

உலகில் பிறந்த மக்கள் எல்லோரும் கற்றோர்களாகிவிட்டால் அது ஒரு பண்பு மிகுந்த குடும்பம் போல் ஆகும் என்ற நம்பிக்கை பொய்க்காது என்பதை ஐக்கிய நாடுகளின் சங்கமும் (UNO) சர்வதேச சங்கமும் (League of Nations) இவ்விரு சங்கங்களின் தோற்றங்களும் உறுதிப்படுத்துகின்றன.

"யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்

சாந்துணையும் கல்லாத வாறு?" (கு:397)

"தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு

காமுறுவர் கற்றறிந் தார்" (கு:399)

என்ற இரண்டு குறள்களையும் நன்றாக ஆராய்ந்தால் உலகம் கல்வியால், அறிவால், அறத்தால், பண்பால், ஒற்றுமையால், அன்பால், முயற்சியால் ஒரு குடும்பம்போல் ஆகும் என்று வள்ளுவர் பெருமகனார் மொழிந்தது முற்றிலும் உண்மை என்று நன்றாய்ப் புலப்படும்.

## உலகப் பொதுச் சிந்தனை:

திருவள்ளுவர் திருக்குறளைத் தந்து, உலகப் பொதுச் சிந்தனையை நம் மக்களிடையே உருவாக்கினார். தலையாய அறமே தலை சிறந்த இலக்கியம் என்ற உணர்வை திருக்குறளை ஓதுவார்க்குத் தெளிவாகும். வள்ளுவரின் சிந்தனையைப் பயில்தோறும் நம் உள்ளத்தில் இன்பமும், அறவுணர்வும், செயல் துடிப்பும், மனிதநேயமும், இயற்கை நாட்டமும் வளரும். நாடும், ஆட்சியும் பற்றிய நம் கருத்துக்கள் தெளிவடையும். இது மனித சமுதாயத்தின் பொதுச் சட்டம். அரசியலமைப்புச் சட்டம். அனைத்துலக மனிதரையும் பாடிய ஒரே பாவலர் திருவள்ளுவரே என்கிறார் ஜி.யு.போப் என்ற மேனாட்டறிஞர்.

மக்களை இணைத்துப் பிணைக்கும் வலிமை பெற்ற ஒரு தேசிய இலக்கியம் தேவை என்றார் பேரறிஞர் ஒருவர். அவ்வாறு உலகை இணைக்கும் உலகப் பேரிலக்கியமாகத் திகழ்கிறது திருக்குறள்.

## பல்பொருள் அங்காடி (Super Market):

தனிமுயற்சி, தனி நம்பிக்கை, குடும்பநலம், நட்பு, ஆளுமைத் திறன், ஆட்சித்திறன், வணிகவளம், தலைமைப் பண்பை அடைதல், நட்பாராய்தல், வறியர்க்கு ஈந்துஉவத்தல், குடிமைப்பண்பு, பெற்ற தாயின் மாண்பு, பொருளீட்டும் வகைமுறை போன்ற ஒப்பற்ற கருத்துக்களை இந்நூல் விவரித்துள்ளது. எனவே, இந்நூலை ஒரு "பல்பொருள் அங்காடி" எனலாம். அவரவர் தேவைக்கேற்ற பொருளை இதற்குள் பெற்றுக் கொள்ளலாம்.

"எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்

இல்லாத எப்பொருளும் இல்லையால்"

என்கிறார் மதுரைத் தமிழ் நாகனார் என்ற புலவர்.

உலகியல் வாழ்க்கைக்கே முதன்மை கொடுத்து உலகு தழுவிய பரந்த நோக்கில் அறம் கூறி உள்ளார் திருவள்ளுவர் எனில் மிகையாகாது.

## நிறைவுரை:

இங்ஙனம் பற்பல சான்றோரும் போற்றும் திருக்குறள் ஆசிரியர் வகுத்துப் போந்த ஒழுக்கமுறை இன்னார், இனியர் என்ற வரைபாடின்றி யாவரும் கையாளுதற்குரியதாய் பொது நோக்கப் பார்வையோடு அருளிச் செய்யப்பட்டுள்ளது. குறள் மணம் உலகெங்கும் பரவும்படிச் செய்தல் நம்மவர் கடமையாகும்.

இதன் பயனாகப் பொதுநெறி உலகெங்கும் தழைத்தோங்கி, அதன் தண்ணீழற்கீழ் மக்கள் சென்று இன்புறுவதே தெய்வப்புலவருக்கு நாம் செய்யும் கைம்மாறு ஆகும்.

*வளரும் . . . . .*



மருத்துவமாமணி தாரா நடராசன்



மருத்துவ மாமணி தாரா நடராசன் அவர்களின் கட்டுரை
தினசெய்தி நாளிதழ் – 21.11.2019

## சின்னஞ்சிறார்களைக் காப்போம்

பாரத நாட்டு மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு விகிதத்தைப் பள்ளிச் சிறார்கள் பெறுகிறார்கள். பள்ளிச் சிறுவர்கள் உடல் வளத்தையும் நலத்தையும் காக்கும் மகத்தான பொறுப்பு நம்மிடம் உள்ளது. மருத்துவ அறிவுரைகளை இளமையிலேயே சிறுவர்களுக்கு நாம் கற்றுத் தந்தால் அவைகளைப் பின்பற்றிச் சிறப்பாக நடப்பார்கள்.

பள்ளிச் சிறுவர்களின் நலத்துக்காக சிறுவர் மருத்துவ நலப்பணி என்றழைக்கப்படும் திட்டம் முப்பதாண்டுகளுக்கு முன் அரும்பியது. போதிய வாய்ப்புகளும் வசதிகளும் இல்லாததால் இத்திட்டத்தில் நாம் பெரிய முன்னேற்றத்தை இன்றும் அடைய முடியவில்லை. உடல் நலனைச் சீராகவும் தூய்மையாகவும் வைத்துக் கொள்ள வேண்டிய அறிவுரைகளை வழங்குவதோடு, பொதுவாகக் காணப்படும் நோய்களுக்கு மருத்துவச் சிகிச்சையையும் இத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றி வருகின்றார்கள்.

நோய்த் தடுப்புக்கான சுகாதார சூழ்நிலையை அமைப்பதோடு, சுத்தமாகவும் உடல் நலத்தோடும் தங்களைக் காத்துக் கொள்வது தான் எல்லாவற்றுக்கும் அடிப்படையாகும். பள்ளிச் சிறுவர்களின் உடல் நலனைக் காப்பதில் பெற்றோர்களுக்குப் பங்கிருப்பது போல ஆசிரியர்களுக்கும் பொறுப்பு உள்ளது.

சென்னை மாநகரத்தில் பள்ளிச் சிறுவர் மருத்துவச் சோதனைகள் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. அரசாங்க மருத்துவமனைகளில் பள்ளிச் சிறுவர் நலப் பிரிவு தனியாக அமைக்கப்பட்டுள்ளது. சிறுவர் மருத்துவப் பராமரிப்புப் பணியை மாநகராட்சியும் தனியாக நடத்துகிறது. அரிமா சங்கம். சுழற்கழகம் போன்ற சமூக நலநிறுவனங்களும் மருத்துவக் குழுவினரைக் கொண்டு பிறருக்கான நலப் பணிகளைச் செய்து வருகின்றன.

பள்ளிச் சிறுவர்கள் அனைவரும் முறையாக மருத்துவச் சோதனை செய்யப்பட்டு, ஒவ்வொருவரின் எடை, உயரம், மார்பகம், மண்டைச் சுற்றளவு, மேல் கையின் நடுச் சுற்றளவு முதலியனவும் ஓர் அட்டையில் குறிக்கப்படுவதோடு, கிருமி, பூச்சிகளால் நோய்கள் பற்றியுள்ளனவா என்றும் சோதிக்கப்படுகின்றனர்.

ஒவ்வொருவரின் மருத்துவ நிலையும் பதிவு செய்யப்பட்டு, அவர்களைத் தாக்குகிற நோய் விவரங்களும் சிகிச்சை முறைகளும் அதில் குறிக்கப்பட்டு, குறிப்புக்கேற்ப மருத்துவச் சிகிச்சையும்அளிக்கப்படுகின்றன.

நமது நாட்டில் பிறக்கும் குழந்தைகளில் 100–க்கு 72 பேர்தான் சிறுவர்களாக வளர்ந்து ஐந்து வயதுப் பருவத்தை அடைந்து பள்ளி செல்லும் நிலைக்கு வருகிறார்கள். மிகுந்த இந்தச் சிறுவர்களைப் பேணிக்காப்பதும், அவர்களுக்கு உரிய சுகாதாரச் சூழ்நிலையைப் படைப்பதும் நம் பொறுப்பாகும். எனவே, எதிர்காலக் குடிமக்களாகிய இந்தச் சிறு பிள்ளைகளை வளமுடையவர்களாக வளர்த்து உருவாக்குவது நமது கடமையாகும்.

பொதுவாகச் சிறுவரிடத்தில் காணப்படும் சில மாற்றங்களைப் பற்றிய விவரங்களையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். பெரும்பாலும் போதுமான தக்க ஊட்டமான உணவு இல்லாமையே பிள்ளைகள் பலவீனமாகவும் நோயாளிகளாகவும் ஆகிறார்கள் என்று கூறலாம். நோய் அணுக்களால் பாதிக்கப்படுபவர்கள் குறைந்த அளவுதான். சமூகப் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள வீட்டுப் பிள்ளைகள் வாட்டமான உணவுப் பற்றாக் குறையால் பெரிதும் இளைத்திருப்பதோடு சோகையும், சோர்வும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த நாட்டுக்கு மருந்து என்பதேகூட போதிய தக்க உணவுதான் என்று கூடக் குறிப்பிடலாம். நாம் அவசியமானவை என்று தெரிந்து கொள்ளாமல் புறக்கணிப்பதோடு எளிமையாகவும் மலிவாகவும் கிடைக்கும் காய்கறிகளில், பண்டங்களில் அடங்கியுள்ள ஊட்டச்சத்தைப் பற்றிப் பெற்றோர்கள் பலருக்குத் தெரிவதில்லை.

அவைகளைப் பற்றிப் பெற்றோர்களுக்கு நாம் விளக்கிக் கூறவேண்டும். தேவையான சில உணவுமுறைகளே ஊட்டச்சத்து நிறைந்ததாக நாமே செய்து காட்டிச் சிறுவர்களுக்கு வழங்குவது நல்லதாகும்.

தொடர்ச்சி அடுத்த பக்கம் ....



மருத்துவமாமணி தாரா நடராசன்

மதிய உணவுத் திட்டம் பல பள்ளிகளில் இந்த அடிப்படையில் செம்மையாக நிறைவேற்றப்படுகின்றதா என்பதையும் நாம் ஆராய வேண்டும். ஊட்ட உணவுத் திட்டமும் சிறுவர் மருத்துவ நலத்திட்டமும் சேர்ந்து இணைந்து செயல்படவேண்டும். அப்போதுதான் சிறுவர்களின் உடல் சீர்குலைவுக்கும், போதிய உணவு இல்லாமைக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை நாம் எளிதில் தெரிந்து கொள்ள முடியும்.

பொதுவாகச் சிறுவர்களிடத்தில் வைட்டமின் ஏ, வைட்டமின்பி, உயிர்ச்சத்துகளின் பற்றாக்குறை உள்ளது. நுண்ணிய பூச்சிகளால் ஏற்படும் நோய்க் குறிகளும் பரவலாக உள்ளன. குறைவான வருமானமுடையவர்களின் குடும்பத்தில் நிலவும் பற்றாக்குறை, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி கிட்டாமை, கழிவுப் பொருள்களை அகற்றும் சாதனங்களின் குறைபாடு, அடிப்படை சுகாதாரநெறிகளைத் தெரிந்து கொள்ளாமை முதலியவை நலக்கேட்டுக்குக் காரணங்களாகும். விரல் நகங்களை நறுக்கிக்கொள்ளுதல், கைகால்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல், செருப்புகளை அணிந்து வெளியில் நடத்தல் முதலிய எளிய துப்புரவு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமற் போவதும் நோய்க்கு இடம் தந்துவிடுகின்றன. கைகளை அடிக்கடி கழுவித் தூய்மையாக்கிக் கொள்ளுதல் என்பது இப்போது எங்கும் வலியுறுத்தப்படுவது நிறைவான செய்தியாகும் .

குறுகலான வகுப்பறைகளில் காற்றோட்டமில்லாத. அதிகமானவர்கள் நெருக்கமாகக் கூடியிருப்பதெல்லாம் சுகாதாரத்துக்குத் தீங்கு தருவதாகும். சொறி, சிரங்கு, படை முதலிய சரும நோய்களும் பொதுவாகக் காண்கிறோம் என்றாலும் அவை வெகுவாகக் குறைந்து வருகின்றன. இது மருத்துவத் துறைக்கு கிடைத்த வெற்றியாகும்.

படிக்கும் போதும், விளையாடும் போதும் ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகுவதாலும், துப்புரவில்லாமல் இருப்பதாலும், தூய்மைக் குறைவை ஏற்படுத்திக் கொள்வதாலும், தோல் நோய்கள் கட்டுக்கடங்காமல் தொற்றி பரவலாகப் படர்ந்து விடுகின்றன.

பற்கள் சம்பந்தமான நோய்களும் பொதுவானதே. சொத்தைப் பற்களாலும், பல்வலியாலும் சிறுவர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்டுக்கு ஒரு முறையாவது எல்லாப் பள்ளிச் சிறுவர்களையும் பல் மருத்துவரிடம் காட்டிச் சோதனை செய்துகொள்ள வேண்டும்.

பல் மருத்துவரின்அறிவுரைகளைக் கேட்டு நடக்க முயலலாம். ஒவ்வொரு பள்ளியிலும் அடிப்படை நல்வாழ்வு நெறிகளைக் கற்றுத் தருவதோடு, ஒரு சுகாதார அலுவலரையே தனியாகப் பணியாற்றச் செய்வதும் கூடப் பொருத்தமாகும்.

காச நோய் அணுக்களால் சிறுவர்கள் தாக்கப்பட்டுள்ளனரா என்பதைக் கண்டறிவதற்காக அவ்வப்போது சோதனைகள் நடத்தப்படுகின்றன. இந்த நோயின் தடுப்புச் சக்தியாக பி. சி. 3. ஊசி மருந்தும் அளிக்கப்படுகிறது. நரம்பு, மூளை சம்பந்தப்பட்ட நோய்களில் கால் கை வலிப்பும், இளம்பிள்ளை வாதநோய்க்கும் ஆளாகிச் சிலர் ஊனமுற்றும் உள்ளனர்.

பிறவியிலே ஏற்பட்ட இதயநோய்க் கோளாறுகளும், வாதத்தால் இதயம் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சிலரும் உண்டு. அரசாங்கமும் மருத்துவத் துறையும் அரும்பாடுபட்டாலும்கூட, ஆறாம் ஏழாம் வகுப்புகளில் படிக்கும் வளர்ந்த சிறுவர்களில் சிலர் அம்மை நோய் தடுப்பூசி குத்திக் கொள்ளாமலேயே இருக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் கொண்டு குழந்தைப் பருவத்தில் பிள்ளைகளுக்கான தடுப்பூசிகள், மருந்துகள் ஆகியவற்றை கவனத்தோடு அவர்களுக்கு அளித்தல் அவசியம். அதுதான் அவர்களின் எதிர்காலத்தில் குறிப்பிட்ட நோய்கள் வாராமல் பாதுகாக்கும் என்பதைப் புரிந்து சின்னஞ் சிறுவர், சிறுமிகளை மருத்துவப் பார்வையோடு செவ்வனே பேணுவோம்.

சிறுவர்களே நாட்டின் வளரும் செல்வங்கள் வாடாத பொன்மலர்கள். குழந்தைகளையும், தெய்வத்தையும் கொண்டாட வேண்டும் என்பது அடிக்கடி கோயிலில் விழாக்கள் காண்பது போல நாளும் விழாவாக குழந்தையின் மனத்தில் மகிழ்ச்சி பொங்க வைக்க வேண்டும் என்ற இந்த உன்னத இலட்சியத்தை நோக்கி நாம் ஒவ்வொரு நாளும் முன்னேற வேண்டும்.



திரு. இரா. குமரவேலன்



## CHAPTER 3

## BHARATAN AS REGARDED BY THE HERO OF THE EPIC

On a legal point also Bharata requested Rama to accept the kingdom .he said that he was giving up the kingdom, which was his own ,to his brother and that he should take it to satisfy all. But Rama refused to accept it saying that it was the command of the father that he should live in the forest and that nobody had any right to change it. by these words of Rama, Bharata's points became weakend and he pleaded and he pleaded incompetenance . In the end, Bharata bowed to the orders of Rama and took a terrible vow :



ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ
நாம நீர் நெடுநகர் நண்ணி நானிலம்
கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரி
சாமிது சரதநின் னணை சாற்றினேன்

" If though fail to return after the end of the fourteenth year and take over the kingdom I shall die by falling into the fire, I pledge this on you, my dear brother ". Rama was shocked to hear this and he knew that his brother Bharata always spoke what he meant.

In his conversation with Rama, Bharata did not succeed to convince him to take up the realm. It was not his failure. Though Rama won over him by sentiment and emotion. It was Bharata who won as per law and in form.

Here Rama skillfully replied to the questions and intricate points raised by Bharata. During this conversation Rama said the following words :

வெற்றி வீர !
உறவிலோய் !
எந்தை !
ஆய்வரும் புலத்தறிவு மேவினாய்

These clearly show that Rama was confident of Bharata's great knowledge of books and of his skill in valarious deeds. Rama regarded Bharata as on erudite scholar and a great warrior.

Bharata took leave of his respected brother Rama and stayed at Nandiyampati, a place outside the city gates of Ayodhya and ruled over the state with the help of the Patukas. He spent his times in prayers controlling the five sense organs and was ever waiting the return of Rama with tears in his eyes day and night because of his great love for Rama.

In Aranya Kandam where the sages sought the help of Rama to fight against Rakshasas he thought that it was right on his part in having come to the rescue of the sages. Here it is clearly seen that Rama did not forget Bharata even at critical moments and he had remembered him always in exile. He said of Bharata as

ஏந்தல் எம்பி வருத்தவும்

***To Continue……***







இலட்சங்களில் ரூபாய் கொட்டி எத்தனை அழகாக வீடுகள் கட்டியிருந்தாலும் வாசலில் போடப்பட்டிருக்கும் சிறு கோலம் என்பது அந்த வீட்டிற்கு அழகுக்கே அழகு சேர்ப்பது போல... நூற்றி தொண்ணூறாவது உலகத்தமிழ் மின்னிதழ் அழகான கோலங்களோடு எங்களின் வரவேற்பை பெற்றிருக்கிறது...

26.07.2023 அன்றைய உலகத்தமிழ் மின்னிதழ் ஏனைய வாரங்களை விட கொஞ்சம் மிஞ்சி இருக்கிறது என்றால் அது மிகையல்ல...

இதழின் முதல் பகுதியான கொள்கை விளக்கக் குறிப்பு பகுதியில் தமிழ் வளர்ச்சித் துறையின் புலவர்களுக்கான திருவிழாக்கள் என்ற பார்வையில் சங்கோஅ புலவர்களுக்கு தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு இருக்கும் நினைவுத் தூண்கள் பற்றிய பட்டியல் படித்து அறிந்தோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 29 பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் கவிஞர் நாளாக கொண்டாடப்பட்டு சங்க புலவர்களின் நினைவுத் தூண்களில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு வருவதை நாம் அறிவோம்...

தமிழ் வளர்ச்சித் துறையோடு ஆங்காங்கே செயல்பட்டு வரும் தமிழ் அமைப்புகளும் இந்த சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்கு மரியாதை செலுத்தி வருவதையும் குறிப்பிட விரும்புகிறேன்...

அந்த வகையில் இன்றைய தென்காசி மாவட்டம்... அதாவது ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோயில் அருகே மாங்குடி என்ற குக் கிராமத்தில் அமைக்கப்பட்டு இருக்கும் மாங்குடி மருதனார் நினைவுத் தூணில் ல் திருநெல்வேலி பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாகவும் கடந்த காலங்களில் மலர்கள் தூவி மரியாதை செய்து இருக்கிறோம்...

தமிழ்ப் புலவர்களுக்கு தமிழ் வளர்ச்சித் துறை எடுத்து வரும் விழாக்கள் தொடரட்டும்.

அடுத்த பகுதியாக நூலேணி, தமிழெழுச்சிப் பகுதிகளை பார்க்கிறோம் ...

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடுகளின் அணிவகுப்பே இந்த நூலேணி பகுதியாகும்.

தமிழெழுச்சிப் பகுதி என்பது வாரம் தோறும் மகாகவி பாரதிக்கும் பாவேந்தர் பாரதிதாசனாருக்கும் மகுடம் சூட்டுகின்ற பகுதியாக அவர்களின் கவிதை வரிகளை எடுத்துச் சொல்லி வரும் பகுதியாகும்.

இதழின் சிறப்பு பகுதியான ஆசிரியம் பகுதியில்" நிலவில் நடப்போம்" என்ற தலைப்பில் அமையப்பட்டிருக்கும் கட்டுரை மிக அற்புதமாக இருக்கிறது.

இந்திய திருநாட்டின் அறிவு வளர்ச்சியை உலகிற்கே எடுத்துச் சொல்லுகின்ற விதமாக சந்திராயன்–3 அதனுடைய அற்புதங்களை விவரித்து சொல்லப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

கடந்த கால சந்திராயன்–1, சந்திராயன்–2 அவைகள் ஆற்றிய அறிவியல் சாதனைகளை அறிவியல் புரட்சியாக மாற்றிக் காட்டும் இந்த சந்திராயன்–3 என்பது நிச்சயம்.

இந்திய திருநாட்டின் அறிவு மேலாண்மைக்கு சந்திரன் –3 ஆகஸ்ட் மாதத்தில் நிகழ்த்த இருக்கும் அறிவியல் அற்புதங்களே சாட்சியாக விளங்கும் .

ஜூலை 15 அன்று பிறந்தநாள் கண்ட தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள் அவர்களுக்குத் தமிழ் வளர்ச்சித் துறை செய்திருக்கும் மரியாதையின் படம் அவ்வப்போது பகுதியில் இடம்பெற்று இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

அடுத்த பகுதியாக தேன் துளி பகுதியை பார்க்கிறோம் ...

தேன் துளி–1–ல் வீடு பற்றியதாகும்.

தன் முயற்சியால் ,தன் கற்பனையால் கட்டிய வீட்டில் குடியிருப்பது நமது இயல்பு...

பிறர் கட்டிய வீட்டில் குடியிருப்பது அந்நியர் இயல்பு என்பதை தேன் துளி–1 அற்புதமாகச் சொல்லுகிறது.

தேன் துளி–2'ல் அன்னை தெரசாவின் படம் அருமையாக பதிவிடப்பட்டிருக்கிறது.

தேன் துளி–2 ஐப் படித்ததும் எனக்கு இப்படிச் சொல்ல தோன்றுகிறது...

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே... எல்லா பொருளும் பயன் கொண்டனவே"

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .*







சங்க காலங்களில் மகளிர் கல்வி பெற்றிருந்தார்கள் என்பதற்கு ஔவையார், பூதப்பாண்டியன் பெருந்தேவியார், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார் என ஒரு பட்டியலையே தனித்தமிழ் ஆட்சியில் மறைமலை அடிகளார் காட்டுகிறார்...

இவைகள் சங்க கால ஆதாரங்கள் என்றால் கீழடி, ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த சான்றுகள் அடிப்படையில் பார்த்தோம் என்றால் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் கல்வியறிவில்... கல்வியறிவோடு வாழ்ந்து இருக்கிறார்கள் என விஞ்ஞானப் பூர்வமான சான்றுகள் சொல்லுகிறது.

உலகத்தமிழ் மின்னிதழில் வருகின்ற கட்டுரைகள் எல்லாம் படிக்கப் படிக்க நம்மை எங்கோ அழைத்துச் செல்வது போன்ற உணர்வை தருகிறது...

உரைவேந்தர் ஔவை துறைசாமியின் சேர மன்னர் வரலாறு, செவ்விசை மாமணி திருமதி சீதை மெய் கண்டான் இவர்களைப் போல முனைவர் தேவி நாச்சியப்பனின் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பற்றிய பிற கவிஞர்களின் கட்டுரைகள் என படிக்கப் படிக்க நம்மை வேறொரு உலகத்திற்கு அழைத்துச் செல்கிறது என்பது உண்மை ...

பெரும் பேராசிரியர் செ. இரா. செல்வகுமார் அவர்களின் எறும்புகள் பற்றிய செய்திகள் மலைக்கச் செய்கின்றன.

அடேயப்பா...

உலகில் இத்தனை வகை எறும்புகளா? என நம்மை வியக்கச் செய்கிறது.

கட்டுரையாசிரியர் சொல்கிறார்...

உலகில் 13800 வகை எறும்புகள் உள்ளதாக. இந்த எண்ணிக்கை ஆச்சரியமாக இருக்கிறது...

அவைகள் 22,000 வகைகளாக பிரிக்கப்பட்டு இருக்கிறது என்ற செய்தியும் ...

இந்தியாவில் 828 வகை எறும்புகள் உள்ளன...என்ற செய்திகளும் ஆச்சரியங்களைத் தருகின்றன.

"சிறிது சிறிதாக அள்ளிச் செல்வதை சிற்றள்ளிச் செல்கின்றன" என்று ஆசிரியர் சொல்லி இருப்பது மிகவும் சுவையாக இருக்கிறது.

" குற்றங்கள் நிகழாமல் கடமைகளை செய்வதே பெருமிதம் தரும், உண்மையோடு செயலாற்றுபவனுக்கு உதவி செய்வதற்குத் தெய்வமே இறங்கி வரும், குற்றம் செய்யாமல் குடும்பத்தைப் பேணுபவனை உலகே வாழ்த்தும், தன்னலத்தோடு செய்யும் இழி செயல் நன்மதிப்பைத் தாழ்த்தும்..." என நல்வழி கற்பித்த தன் தமிழன்னைக்கு செம்மொழிக் கவிஞர் மெய்ஞானி பிரபாகர பாபு சூடி இருக்கும் "நான் மணிமாலை" அற்புதம்... அபாரம் .

"வள்ளுவர்– வள்ளலார் காட்டும் உயிர் இரக்கம்" என்ற தலைப்பில் புலவர் தி.வே. விஜயலட்சுமி அவர்களின் எழுத்துக்களை படித்தேன் ...

அதில் வரும் வரியான "மற்றவர்களுக்குப் பயன்பட வாழ்வதற்கே நாம் இந்த உலகில் பிறந்துள்ளோம்" என்பதை படித்ததும் நான் முன்பொரு முறை எழுதிய வாசகம் ஒன்று நினைவுக்கு வருகிறது...

"பிறரை மகிழ்ச்சிப் படுத்துவதில்தான் நமது வாழ்க்கையின் அர்த்தமே இருக்கிறது" என.

1940–ல் தன் மாமனார் உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளை குறுந்தொகை மாநாட்டில் பேசியதை குறிப்பிட்டு "குறுந்தொகை மாநாடு–2002"ல் மருத்துவ மாமணி தாரா வழங்கிய தலைமையுரை அற்புதம்...

புகழ் வணக்கம் பகுதியில் தி.வே. விஜயலட்சுமி அவர்கள் தமிழறிஞர் ஔவை நடராசன் அவர்களுக்கு வழங்கி இருக்கும் புகழ் கட்டுரை குறிப்பிடத்தக்க ஒன்றுதான்.

தமிழ் ஆட்சி மொழிச் சட்டவார நிகழ்வுகள் மயிலாடுதுறை, தர்மபுரி, விருதுநகர் மாவட்டங்களில் நடைபெற்றதை படங்களோடு பதிவு செய்திருப்பது பாராட்டத்தக்கது.

வரும் வாரங்களில் மாவட்டங்களில் நடந்து வரும் கலைஞர் 100 ஆட்சி மொழி பயிலரங்கம் பற்றிய செய்திகள் வரும் என எதிர்பார்க்கிறேன்...

கவிஞர் பேரா, திருநெல்வேலி.

தலைவர்,

பொதிகைத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி.



# பூமழை

26.07. 23 உலகத்தமிழ்– 190 – வண்ணக் கோலங்கள் இதழ் முகப்பு கண்களைக் கவர்ந்தன. கணியன் பூங்குன்றனாருக்கு மகிபாலன்பட்டியிலும் கபிலருக்குத் திருக்கோவிலூரிலும் நினைவுத் தூண்கள் நிறுவப்பட்டுள்ள செய்தியைக் கொள்கை விளக்கக் குறிப்பில் கண்டு மகிழ்ந்தேன்.

புலவர்கள், எழுத்தாளர்களை மதிக்கும் போக்கு தமிழகத்தில் வளர்ந்து வருவது நல்ல மாற்றம்.

ஆசிரியம் பகுதியில் சந்திராயன் 3 விண்கலத்தின் பகுதிகள், செயல்பாடுகளை எளிமையாக அனைவருக்கும் புரியும்படி ஆசிரியர் கூறியுள்ளார்.

மறைமலை அடிகள் கட்டுரையில் பெண் கல்வியின் முக்கியத்துவத்தைக் கம்பர், நாலடியார் கவிதைகள் மூலம் உணரச் செய்கிறார்.

மறைமலையடிகளாரின் 147 ஆம் பிறந்த நாளில் அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர்கள், மேயர், ஆட்சியர், அதிகாரிகள் அனைவரும் மலர் வணக்கம் செய்தது சிறப்பு.

தமிழ் வளர்ச்சித் துறையின் இத்தகு பணிகள் என்றும் போற்றத்தக்கது.

தேன்துளி –1 தமிழர்களின் சொந்த வீடு கட்டும் விருப்பத்தை எடுத்துரைக்கிறது.

தேன்துளி –2 பயன்படாத பொருள் இப்பாரினில் இல்லை என்ற அன்னை தெரேசாவின் நன் மொழியை வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்ற மொழியோடு பொருத்திக் காணலாம்;பயன் கொள்ளலாம்.

செந்தமிழ்த்திலகம் திரு. செல்லத்தம்பி றசிறீக்கந்தராசா பிரித்தானிய – அமெரிக்க ஆங்கிலச் சொற்கள் வேறுபாட்டை அருமையாக எடுத்துக் காட்டுகிறார். உதாரணமாக

Autumn – Fall

Biscuit – Cookie

Crossroad – Intersection

எனப் படித்தறியச் சுவையாக உள்ளது. மருத்துவ மாமணி தாரா நடராசன் அவர்களின் குறுந்தொகை மாநாட்டுத் தலைமை உரையில், குறுந்தொகை மகளிர் அறிவு, பேச்சுத்திறன், கடமையுணர்வு மிக்கவர்களாக இருந்தனர் என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

புலவர் தி.வே. விஜயலட்சுமி அவர்கள் அவ்வை நடராசனார் அவர்களுடன் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை "அருளுள்ளம் வாய்ந்த அழகு தமிழ்ச் சொல்வேந்தர்" என்று பொருத்தமாகத் தலைப்பிட்டு வழங்கியுள்ளார். ஐயா நடராசனார் அவர்களுக்கான மிகச் சிறந்த புகழ் வணக்கம் இது.

மாவட்டங்களில் நடைபெற்ற ஆட்சி மொழிச் சட்ட வாரம் படங்கள் அழகு. மகிழ்ச்சி.





வாகீச கலாநிதி கி.வா.ஜ.



## போரும் நீரும் . . .

'அப்படியே ஆகட்டும். புண்ணியமும் வெற்றியும் புகழும் ஒருங்கே கிடைப்பதற்கு மூல காரணம் ஒன்று உண்டு. அதனை உடையவர்கள் மறுமையுல கத்துச் செல்வமும், அரசரை வென்று நிற்கும் திறனும், நல்லிசையும் பெறுவார்கள்."

"படைப் பலத்தையா சொல்கிறீர்கள்?'

"அல்ல, அல்ல. யானை முதலிய படைகள் அல்ல; வேறொரு படை. உழுபடை, படைகளுக்கெல்லாம் உணவளிக்காவிட்டால் அவை போரிட முடியுமா? உடம்பிலே உயிர் தங்கி இருக்கும்படி செய்தாலல்லவா போரிட முடியும் ?"

'நான் படை வீரர்களுக்கு வேண்டிய உணவைக் கொடுத்தேன். அவர்களுக்கு இனியும் குறைவின்றிக் கொடுக்கக் கட்டளை பிறப்பித்திருக்கிறேன்."

நல்ல காரியந்தான். உண்டி கொடுத்தவரே உயிர் கொடுத்தவ ராகிறார்கள். உணவு இல்லா விட்டால் உடலும் இல்லை. ஆனால் அந்த உணவு எப்படி வருகிறது ? அது தானே கிடைத்துவிடாது. நிலமும் நீரும் சேர்ந்தால் உணவு கிடைக்கும் ; உண வுப் பொருள் விளையும். அந்த இரண்டையும் சேர்ப்ப வர்களே உடம்பையும் உயிரையும் படைத்தவர்கள் ஆகிறார்கள்." நம்முடைய நாட்டில் விளை நிலத்துக்குக் குறை வில்லையே?"

உண்மைதான். ஆனாலும் நிலம் மாத்திரம் இருந்தால் போ கள் துமா ? எவ்வளவுதான் பரந்த நிலங் இருந்தாலும், விதைத்துவிட்டு வானத்தைப் பார்க்கும்படியாக இருந்தால் அந்த நிலங்களால் உடையவனுக்கு என்ன பயன் ? அரசே, சற்றுக் கவ னிக்கவேண்டும். படை இருக்கலாம்; ஆனால் அதற்கு என்றும் கொடுத்துவர உணவு வேண்டும். நிலம் இருக்கலாம்; ஆனால் அதை விளையும்படிச் செய்ய நீர் வேண்டும். வானத்திலே நீர் இருக்கிறதென்று நம்பியிருந்தால் நமக்கு வேண்டியபொழுது அது வழங் காது. அது வழங்கும்போது நாம் சேமித்து வைக்க வேண்டும். நிலம் பள்ளமாகக் குழிந்திருக்கும் இடங் களில் வேண்டிய கரை கட்டியும், ஏரி குளங்களைக் கரை திருத்தியும் பாதுகாக்க வேண்டும். அப்படி நீரைத் தடுத்தால் நாடு றளம் பெறும். நீரைத் தேக் கினவர் யாரோ அவரே புகழையும் தேக்குவார்."

அரசன் சிந்தனையில் ஆழ்ந்தான். ஏரி குளங் களைச் சீர் திருத்தவேண்டும் என்று எப்பொழுதோ யாரோ சொல்லிக் காதில் விழுந்ததாக நினைவு வந் தது. அமைச்சர் சொன்னதைத்தான் பராமுகமாகக் கேட்டிருந்தான். இப்போது அதையே அழுத்தந் திருத்தமாகப் புலவர் சொன்னார்; படிப்படியாகச் சொன்னார். அவன் மனத்தில் அது உறைத்தது.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர். நீரையும் நிலத்தையும் சேர்த்தவர்களால்தான் உடம் பையும் உயிரையும் சேர்த்து வைக்கமுடியும். வானம் நம்முடைய விருப்பப்படி பெய்யாது. நீரைத்தேக்கின வர்களே புகழைத் தேக்குவார். இந்தப் பொன்னான வாக்கியங்கள் ஒவ்வொன்றாக அவன் உள்ளத்தில் கணீர் கணீர் என்று மணியடிப்பதுபோல் மீட்டும் ஒலித்தன.

"புலவர் பெருமானே, நானும் நீரைத் தேக்கிப் புகழைத் தேக்க முயல்வேன்" என்ற வார்த்தைகள் அரசன் வாயிலிருந்து வந்தபோது, அங்கிருந்த அமைச்சர்களின் முகங்கள் என்றும் இல்லாத மலர்ச்சியைப் பெற்றன.

*வளரும் . . . .*





34

# புகழ் வணக்கம்

## அருளுள்ளம் வாய்ந்த அழகுதமிழ்ச் சொல்வேந்தர்



– தி. வே. விஜயலட்சுமி

ஒருமுறை பாரதிய வித்யாபவனில் "தூதின் சிறப்பு" குறித்து நாவேந்தர் உரையாற்ற வேண்டிய நிகழ்வு. கிளி, பிறா, அன்னம், தமிழ் போன்றவற்றைத் தலைவனிடம் தூது விடுத்து, தலைவி தன் விருப்பத்தைச் சொல்ல வருமாறு அமைந்த இலக்கிய வகை தூது. தன் உரை தொடங்குவதற்கு முன்பு பாரதியின், கிள்ளை விடு தூது ஒன்று பாட வேண்டும் என்று, 'சொல்ல வல்லாயோ கிளியே' என்ற பாடலைப் பாடுங்கள் என்று கூறி பாட வைத்து எனக்கு ஓர் அரிய வாய்ப்பை அளித்தமை நான் பெற்ற பெரும் பேறு.

இவ்வாறு வாரத்தில் செவ்வாய், வியாழன் தி.நகர் திலகர் தெருவில் உள்ள அலுவலகத்தில் 12.00 மணி முதல் 5.00 மணி வரை தமிழிலக்கியப் பரிமாற்றம் நடைபெறும். தமிழறிஞர்கள் சிலரும் உடன் இருந்து உரையைடலில் இணைந்து கொள்வர். நான் எங்கள் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லும் செய் கலந்த உணவை, சுவைத்து உண்பார். நான் முற்பிறப்பில் செய்த தவப்பயனோ என்று அவ்வப்போது நினைத்துக் கொள்வேன். ஔவை அவர்கள் அலுவலகத் தட்டச்சு செய்பவர் திருமதி இலட்சுமி அவர்கள். அவர் இட்ட பணியை உடனுடன் செய்து கொடுப்பார்.

நான் எங்கள் தந்தையாரின் 94–ஆம் ஆண்டுப் பிறந்த நாளையொட்டி என் தாயார் ஆசையை நிறைவேற்ற நினைவு மலரொன்று தந்தையார் பணியாற்றிய கல்லூரியிலேயே வெளியிட விருப்பம் கொண்டேன். அவரிடம் 1943 முதல் 1978 முடிய தமிழ் பயின்ற அறிஞர்களைத் தெரிந்த அளவிற்கு, இயன்றவரை தொடர்புகளைத் திரட்டினேன். முனைவர் தமிழண்ணல், முனைவர் அ. அறிவொளி, மேனாள் துணைவேந்தர் ம. இராசேந்திரன் போன்ற பல தமிழறிஞர்களிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், தந்தை குறித்த நினைவலைகள் பெற்று அத்துடன், "எந்தையாரின் வாழ்வும், தமிழ்த் தொண்டும்" என்ற வரலாற்றையும் இணைத்து நினைவு மலர் ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த மலருக்கு ஏற்றதொரு பெயர் சூடிய பத்மஸ்ரீ முனைவர் ஔவை நடராசன் அவர்கள் வழங்கிய அணிந்துரை பன்மணிக் குவையாகத் திகழ்கிறது. 2014ஆம் ஆண்டு பிப்ரவரி 8–ஆம் நாள் திருவையாற்று அரசர் கல்லூரியின் முதுபெரும் புலவர் திரு. ப. அரங்கசாமி அவர்கள் வெளியிட, சேக்கிழாரடிப்பொடி டாக்டர் தி. ந. இராமச்சந்திரன் அவர்கள் பெற்றுக்கொள்ள, தமிழகத்துப் பெரும் புலவர்கள் சிறப்புரையாற்ற விருந்தோம்பலுடன் விழா நடைபெற்றது. திரு. ஔவை நடராசன் அவர்கள் தலைமையேற்று நடத்த ஒப்புக் கொண்டும் அவர் உடல்நலம் சரியில்லாததால் வரலியலாமற் போயிற்று. அஃது எனக்கு ஒரு பெருங்குறை. என் வருத்தம் கண்டு, இளகிய மனம் கொண்ட ஔவையவர்கள்

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . .*







# புகழ் வணக்கம்

எங்கள் தந்தையார் பேராசிரியர் எச் வேங்கடராமன் ஒரு சீரிய வாழ்த்துரை பேசிப் பதிவு செய்து விழாவில் ஒலிபரப்புமாறு என்னிடம் நல்கினார். அவர் கண்களில் கண்ணீர். 10 மணித் துளிகள் கொண்ட அவ்வுரை இலக்கிய வரலாற்றில் இடம் பெறத்தக்க ஏற்றமான உரை. என்னைத் தமிழுலகு அரிய ஒரு முத்தாய்ப்பு எனலாம். அவர் நல்கிய வாழ்த்துரை பின் வருமாறு:—

ஔவையில் வியத்தகு வாழ்த்துரை—அருளுரை (சுருக்கம்)

“இமைதிறவாமல் ஏக்கக் கடலில் ஏங்கித் தவிக்கின்ற தம் மக்கட் செல்வங்களையும் தமிழ் படித்து நீ என்னைப் போல் திகழ வேண்டும்” என்று சொல்லி வாழ்த்தி வளர்த்த அருமந்தத் திருமகளார் புலவர் விஜயலட்சுமியையும் புலம்புகின்ற நிலையில், பேரறிஞராய், பேராசிரியராய், செந்தமிழ் நாட்டு வேதியராகவும் திகழ்ந்த வெங்கடராமய்யர் அவர்களைத் தமிழ் நாட்டு மக்கள் அனைரும் போற்றி வணங்குதல் பெரும் கடமையாகும். பழமையும் புகழும், பெருமிதமும் வாய்ந்த தமிழ்க் கல்லூரிகளில் ஐயாற்று அரசர் கல்லூரியில் நான் மதிக்கும் பெரும் பேராசிரியர்கள் பலர் பணியாற்றியுள்ளனர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் வைணவத் துறையில் நான் மதிக்கும் பெரும் பேராசிரியராக விளங்கிய திரு புருஷோத்தம நாயுடு அவர்களும், சென்னை அரசு மாநிலக் கல்லூரிப் பேராசிரியராகவும், தமிழக அரசின் மொழி பெயர்ப்புத் துறைப் பேராசிரியராகவும் பணியாற்றிய திரு கு. இராஜவேலுவும், நாடகத் துறைக்குப் பெரும் புகழ் சேர்த்த செம்மல் S D சுந்தரம் அவர்களும் இக்கல்லூரியிற் படித்துப் புகழ் பெற்றவர்கள் பேராசிரியர் வித்வான் தி.வே. கோபாலய்யருக்கு இவர் ஆசானாய் அமைந்துள்ளாரெனில் இவர் புலமைக்குச் சான்று வேண்டுமோ? அடக்கமும் ஆன்றவிந்த கொள்கையும், பதற்றமில்லாமல் பரிவோடு பேசும் பேச்சும், நாமறிந்த தமிழிலக்கன, இலக்கியங்களைக் கன்னல் சாறாய் மாணவர்க்கு ஊட்டிய மாபெரும் மனமும் கொண்டவராய்த் திகழ்ந்துள்ளார் வேங்கடராமன் அவர்கள். அவர் திருமகளார் அவ்வப்போது வந்து என்னைக் காணும்போது தம் தந்தையார் படித்த தொல்காப்பியம் மற்றும் இலக்கிய நூல்களைக் கொண்டு வந்து என்னிடம் அவ்வப்போது காட்டுவார். எழுத்துக்கு எழுத்து படித்த பாங்கும். திருக்குறளைப் பரிமேலழகர் உரையுடன் நுட்பமாகப் படித்து, அழகாக உரை நுட்பங்கள். ஒப்புமைக் குறிப்புகள் இவற்றையெல்லாம் நூலில் குறித்து வைத்துள்ள பாங்கை எண்ணிக் கண்கலங்குகிறேன்.

உ.வே.சா அவர்கள் நூலகம் அரிய நூல்களைக் கொண்ட மாபெரும் நூலகம். போற்றுவாரும், புரப்பாரும் இன்றி ஓர் பக்கத்தில் எளிமையாகச் செயல்பட்டு வருகிறது. இன்றே அப்படியெனில் 25 ஆண்டுகட்கு முன்னர் நம் பெரும்புலவர் வெங்கடராமய்யர் அங்கு அடிக்கடி சென்று உ.வே.சா. ஐயர் அவர்கள் ஏடுகளையும் அவர் எழுதி வைத்த குறிப்புகளையும் ஒழுங்குபடுத்தி பதவுரை, மேற்கோளுடன் நற்றிணை நானூற்றை அழகிய பதிப்பாகக் கொண்டநற்றிணைக்குப் பின்னத்தூர் நாராயணசாமி அய்யரும், எந்தையாரும் உரையெழுதி வெளியிட்டிருப்பினும், உவே.சா. அவர்கள் எழுதிய குறிப்புகள் கொண்டு ஆழ்ந்து குறியிட்டு, ஏட்டின் சில மாற்றங்களுடன் நற்றிணையைப் பதிப்பித்துள்ளார்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .*





# புகழ் வணக்கம்

அனைவருக்குமே தளர்ச்சியும், முதிர்ச்சியும் உலகில் பொது என்றாலும், அவர்க்கு தமிழுணர்ச்சி ஒரு சிறிதும் குறையாது இருந்தது. தமிழ்ப்புலமை பெற்றிருந்தாலும், விதி வயத்தால் மைய அரசோடு தொடர்புடைய நிதி நிறுவனத்தில் நிருவாக அதிகாரியாக விஜயலட்சுமி அவர்கள் பணியாற்றி வந்தாலும், அந்தி வந்தால் தம் அருமைத் திருமகளுக்குத் தாமறிந்த தமிழ்க் கருத்துகளைச் சொல்லி அறிவூட்டி வந்தார். ஆருயிர் வாழ்க்கைத் துணைவரை இளம் பருவத்தில் இழந்து, பின் தன் ஆருயிர் தந்தையார். தாயார் அவர்களையும் இழந்து துயருற்றிருந்த விஜயலட்சுமி வாய் திறந்தால் வண்ணம் பாடுகிற வெண்பாப் பாடுகிற புலமைத் திறமும், சிறந்த இலக்கண இலக்கிய அறிவும் வாய்க்கப் பெற்றவர்.

தம் தந்தையார்க்கு நினைவு மலர் ஒன்றை பல இடையூறுகளைத் தாண்டி தனியொரு மகளாக இருந்து விழா நடத்தும் அம்மையார் மலர் வெளியிடுகிறார். இவ்வம்மையாருக்குத் தமிழுலகும். தமிழறிஞர் பெருமக்களும் அவர் நெஞ்சத்திற்குத் துணையாக என்றும் இருக்க ஊக்கம் அளிக்க வேண்டும். தாய், தந்தை, கணவர் என்ற மூவரையும் இழந்து அவர்களை நினைந்து நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து நெக்கு நெக்காய் உருகி கண்ணீரால் நனைந்து நனைந்தும் தந்தையார்க்கு மகள் தந்தைக்கு ஆற்றும் உதவியாய் இச்செயலைச் செய்கிறதை எண்ணி நெகிழ்கிறேன். முன்னியது முடிக்கும் ஆற்றல் பெற்ற விஜயலட்சுமிக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள். "உடல் நலம் சரியில்லாததால், என்னால் வர இயலவில்லையெனினும் என் மனமெல்லாம் திருவையாற்று விழாவிலேயே இருக்கும்" என்று ஔவையவர்கள் பதிவு செய்து அளித்த வாழ்த்துரை மலருக்கு மணிமகுடமாக அமைந்தது. குறுகிய நாட்களில் என் தமிழார்வத்தைப் புரிந்து கொண்டு, தந்தையின் தகுதியை எடுத்துக் கூறி, மனித நேயத்தின் எல்லைக்கே சென்று விட்டார் திரு ஔவை நடராசன் அவர்கள். அவர்கட்கு நன்றி பாராட்ட நற்றமிழில் சொற்கள் இல்லை அப்பெருமகனைத் தலைதாழ்த்தி வணங்குகிறேன்.

பல்லாண்டுகள் பழகியும் ஒருவர் மனத்துயரம், அவர்தம் திறமைகளைப் புரிந்து கொள்ளாத இவ்வுலகில் இப்படியும் ஒரு மேதகு அறிஞரா? என்று நினைத்து பெருமிதம் கொண்டேன். இறைவனுக்கு நன்றி சொன்னேன். ஏறிய மேடைதோறும் இனிய அரிய பெரிய கருத்துகளை அலட்டிக் கொள்ளாமல், கையில் குறிப்பில்லாமல் நளினமாகப் பேசி அவையோரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் உலகறிந்த பேரறிஞர், கலைமாமணி, பத்மஸ்ரீ ஔவை நடராசன் அவர்கள் என் மனத்துயரின் ஆழத்தைப் புரிந்துகொண்டு புத்துணர்ச்சி தந்து மலர் வைத்த அருளாளர் என்பதை எத்தனை முறை கூறினும் தகும்.

தான் விழாவில் கலந்து கொள்ளவில்லை என்ற குறையை நீக்க சென்னையில் நூல் அறிமுக விழா வொன்று ஏப்ரல் 2014–இல் நடத்தி, சென்னை வாழ் மக்கட்கு எடுத்துரைக்க எந்தையாரையும், அடியேனையும் பாராட்டிச் சிறப்புச் செய்தார். இத்தகு மனப்பான்மை யாருக்கு வரும்? என் பெற்றோர் இறைவனையே ஔவை அவர்களின் உருவத்தில் அனுப்பியுள்ளார் என்றே நினைப்பேன். என் உடன் பிறந்தவர்கட்கும் மிக்க மகிழ்ச்சி. உலகத் திருக்குறள் மையத்தில் ஆயுள் உறுப்பினராக இருந்து பேராசிரியர் முனைவர் கு. மோகனராக அவர்கள் வழிகாட்டுதலில் திருக்குறளில் பெண்கள் நிலை குறித்து ஆய்வு செய்த என் நூலை ஆர்வமாகப் படித்தார். முனைவர் கு. மோகனராக அவர்கள் திறமையில் பெருமதிப்புக் கொண்டவர். எந்தையார் பதிப்பித்த நற்றினை நூலை விலை கொடுத்து வாங்கிக் கொண்டார். அவர் அல்லும் பகலும் உழைத்து எழுதிய அருந்தமிழ் நூலை இலவசமாகப் பெற்றுக்கொள்ள என் மனம் ஒப்பவில்லை என்ற ஔவை அவர்கட்கு எத்தகைய ஒரு நற்சிந்தனை! வியந்தேன்.

***தொடரும் . . . . .***

## தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக
## 2022–2023ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற
## ஆட்சிமொழிச் சட்ட வாரம் — திருவண்ணாமலை மாவட்டம்

முதல் நாள் - 01.03.2023





விழிப்புணர்வுப் பேரணி

இரண்டாம் நாள் - 02.03.2023



வணிகர் சங்கக் கூட்டம்

மூன்றாம் நாள் - 03.03.2023



கணினித் தமிழ் கருத்தரங்கம்

நான்காம் நாள் - 04.03.2023



ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டம்

ஐந்தாம் நாள் – 06.03.2023




அரசுப் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு

ஆறாம் நாள் - 07.03.2023



அரசுப் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு

ஏழாம் நாள் - 08.03.2023



ஆட்சிமொழிப் பட்டி மன்றம்

# தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக 2022–2023ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற ஆட்சிமொழிச் சட்ட வாரம் — திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் முனைவர் ச. விசாகன் இ.ஆ.ப அவர்களின் தலைமையில் ஆட்சிமொழி சட்ட வாரம் (01.03.2023 முதல் 08.03.2023 வரை)

## முதல் நாள் 01.03.2023





விழிப்புணர்வுப் பேரணி

## இரண்டாம் நாள் 02.03.2023



கணினித் தமிழ் பயிற்சி வகுப்பு

## மூன்றாம் நாள் 03.03.2023



ஆட்சிமொழி மின்காட்சியுரை பேரணி

## நான்காம் நாள் 0403.2023



வணிக நிறுவனங்களுடன் கலந்துரையாடல்

## ஐந்தாம் நாள் 06.03.2023



பட்டிமன்றம்

## ஆறாம் நாள் 07.03.2023



வரைவுகள் குறிப்புகள் பயிற்சி வகுப்பு

## ஏழாம் நாள் 08.03.2023



ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டம்

தமிழ் போல் மொழி இல்லை!

தமிழின்றி நாம் இல்லை!!





தமிழ்நாடு அரசு

# தமிழ் வளர்ச்சித் துறை

## சிவகங்கை மாவட்டம்

# ஆட்சிமொழிச் சட்ட வாரம் - 2023

(21.02.2023 முதல் 28.02.2023 முடிய)

முதல் நாள் நிகழ்வு (21.02.2023)



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திரு.**ப.மதுசூதன் ரெட்டி** இ.ஆ.ப., அவர்களால் பேரணி கொடியசைத்து தொடங்கி வைக்கப்பெற்றது.

இரண்டு, மூன்று, நான்காம் நாள் நிகழ்வு (22, 23, 24.02.2023)



அரசுப் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள்

ஐந்தாம் நாள் நிகழ்வு (25.02.2023)



வணிக நிறுவன உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்

ஆறாம் நாள் நிகழ்வு (26.02.2023)



விழிப்புணர்வுப் பட்டிமன்றம்

ஏழாம் நாள் நிகழ்வுகள் (27.02.2023)



திட்டச் செயலாக்க விளக்கக் கூட்டம்



தெருமுனை விளக்கக் கூட்டம்



தமிழ் ஆட்சிமொழிச் சட்டவாரம் தொடர்பான
நாளிதழ்ச் செய்திக் குறிப்புகள்

